





# தினப்புயல்

PIN news

THINAPPUYAL

තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06







மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -345




# கொழும்பு போர்ட் சிட்டி விவகாரம் சீன காலனியாக மாற போகிறதா?

# இலங்கையின் முஸ்லீம்களை சீண்டி பார்ப்பது அரசிற்கு ஆபத்து!

# உலக நாட்டை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் சீன மருத்துவர் அதிர்ச்சி தகவல்

# கொழும்பு போர்ட் சிட்டி விவகாரம் – சீன காலணியாக மாறப்போகின்றதா?

சீனாவினுடைய மிகப்பெரும் வர்த்தக மையமாக போர்ட்சிட்டி இருக்கின்றது. இங்கு என்ன நடக்க போகின்றது இதனால் இலங்கையில் வாழும் மக்களுக்கு ஏதேனும் நன்மை இருக்கின்றதா? என்று எல்லாம் நாம் பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது. இதைவிடவும் பூகோள ரீதியாக அந்த நிலப்பரப்பை ஆக்கிரமிக்க வேண்டும் என்பது தான் சீனாவினுடைய மிகப்பெரும் திட்டம். அதுபோன்று இன்று எங்கு பார்த்தாலும் ஒரு சீன மயப்படுத்தல் இலங்கையிலே காட்சியளிக்கிறது. அதுபோன்று சிங்கப்பூரில் மலேசியாவில் இந்தோனேஷியாவில் இவ்வாறான சீனர்களின் உள்நுழைவு என்பதும் அவர்களுடைய மொழியை இந்த நாட்டுகுள் புகுத்துவது என்பதும் அவர்கள் இலங்கைக்குள் கால் ஊன்றுவதற்கு மிக முக்கியமான விடயமாகத்தான் பார்க்கப்படுகிறது.

அரசியல் களத்திலே எவ்வாறான பிரச்சனைகள் எவ்வாறு சென்றுகொண்டு இருந்தாலும் கூட இந்த நாட்டுக்கு சீனர்களுடைய போர்ட்சிட்டியினால் பாரியதொரு சிக்கல் ஏற்படபோகிறது. நில ஆக்கிரமிப்பு மட்டுமல்ல ஆசிய பிராந்தியத்தில் இந்த நிலப்பரப்பை தக்க வைத்துக்கொண்டால் ஒரு உலக வல்லரசுகளுடனான போரின் பொழுது தன்னை காப்பாற்றிக்கொள்வதற்கான முழு நடவடிக்கைகளினையுமே சீன அரசாங்கம் தற்பொழுதிலிருந்து அதனை ஏற்பாடு செய்துவருகிறது. சீனாவை பொருத்தவரையில் ஒரு விடயம் அவர்கள் செய்வார்கள். அதாவது உற்பத்தியை உருவாக்கும் ஒன்றைத் தான் அவர்கள் விலைக்கு வாங்குவார்கள். ஏனையவற்றை அவர்கள் பொருட்களாக விற்றுவிடுவார்கள். இனாமமாக கூட கொடுத்து விடுவார்கள்.

ஆனால் அந்த மூலதனம் எவ்வாறு உருவாக்கப்படுகிறதோ அதனை கண்டுபிடித்து அதனூடான செயற்பாடுகளைத் தான் அவர்கள் சந்தைப்படுத்துவார்கள். அது போன்று ஒரு மூலதனத்தை உருவாக்குகின்ற அல்லது அதிலிருந்து ஒரு உற்பத்தியை பெருக்கி பிறருக்கு கொடுக்கின்ற அல்லது பிறருடைய அந்நியச்செலாவணியை உள்வாங்குகின்ற ஒரு நடவடிக்கையைத் தான் இலங்கையில் இருக்கக்கூடிய போர்ட்சிட்டி தற்பொழுது உருவாக்கப்பட்டிருக்கின்றது.

அது போன்று முஸ்லிங்களின் வியாபாரம் பாரியளவிலே பாதிக்கப்படப்போகிறது அதுபோன்று இங்கிருக்கும் வர்த்தகர்களின் வியாபாரம் பாதிக்கப்படப்போகிறது இதை முன்னாள் பிரதமராக ரணில் விக்ரமசிங்க அவர்கள் இருந்தபொழுது இது கைச்சாத்திடப்பட்டது. தற்பொழுது இருக்கின்ற ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்களை குறை சொல்லி பிரயோசனம் இல்லை. காரணம் என்னவென்றால் விடுதலைப்போராட்டத்தை அழிப்பதற்கு அல்லது அவர்களுடைய போராட்டத்தை மௌனிப்பதற்கு சீனா. இந்தியா அமெரிக்கா போன்ற நாடுகளிடம் அரசு கடன் வாங்கியது தற்பொழுது அதிக கடனாக குண்டுகளை எல்லாம் கொடுத்து இந்த நாட்டிலே இனப்படுகொலை ஒன்றினை நிகழ்த்தியிருக்கிறது. முள்ளிவாய்க்காலில் மட்டும் 1 இலட்சத்து 40 ஆயிரம் பேரிற்கு மேல் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அது எவ்வாறிருப்பினும் ஒரு நாட்டை தன்னிறைவு கொண்ட பொருளாதாரத்தினூடாக ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் வழிநடத்தி செல்வதற்கு இது முட்டுக்கட்டையாக இருக்கிறது.

ஆனால் ஜனாதிபதி அவர்கள் அடிக்கடி கூறுகின்றார் விவசாயத்தில் மற்றும் பொருளாதாரத்தில் தன்னிறைவு கொண்ட நாடாக இதனை மாற்றிவருகின்ற பொழுது போர்ட்சிட்டி போன்ற விடயங்கள் உள்நுழைக்கப்பட்டு இது சம்பந்தமான விடயங்கள் இருக்கின்ற பொழுது எதையுமே சாதிக்க முடியாத சூழ்நிலை இந்த நாட்டில் உருவாக்கப்படுகின்றது.

அதாவது ஒரு கடல் வளத்திலே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தலைநகரத்தை அவர்கள் கைப்பற்றியிருக்கிறார்கள். அந்த கைப்பற்றப்பட்ட இடங்களிலே நாங்கள் அங்கு என்னன்ன அமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு என்னன்ன மையங்கள் அமைக்கப்படுகின்றன. எங்கிருந்தெல்லாம் சீனாவினுடைய புலனாய்வு எவ்வாறெல்லாம் செயற்படப்போகின்றன என்ற தகவல்களை எல்லாம் நாங்கள் எதிர்வரும் வாரங்களிலே முழுமையாக தர இருக்கின்றோம். அதற்கான தரவுகள் எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே பார்க்கும் பொழுது இதுவொரு இந்தியாவிற்கு அமெரிக்காவிற்கு பெரும் தலையிடியாக இருந்தாலும் கூட அவர்கள் இலங்கையை பகடைக்காயாக பயன்படுத்துகின்ற ஒரு நிலைப்பாட்டை சீனா தற்பொழுது கையாண்டிருக்கிறது.

ஏற்கனவே அம்பாந்தோட்டை துறை முகம் சீனர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சுமந்திரன் அவர்கள் ஒரு லீகல் அட்வைசராக அதிலே இருந்திருக்கிறார் என்ற செய்தி உறுதிப்படுத்தப்படாத செய்தியாக வந்திருக்கிறது. அது தொடர்பான ஆய்வுகளும் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே இலங்கையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் எந்தவொரு நாடும் இலங்கையில் ஆக்கிரமிப்பதற்கு மிகவும் பயந்தார்கள் உள்நுழையவில்லை. ஆனால் தற்பொழுது ஒவ்வொரு நாடுகளும் இந்த இடத்தில் கால் பதிக்க தொடங்கிவிட்டன. இந்தியாவோ அமெரிக்காவோ இந்த இடத்திலே முதலாவதாக கால் பதித்த இடம் என்றதற்காக சீன அரசாங்கம் இலங்கையை விலைகொடுத்து வாங்கும் அளவிற்கு கடன் சுமைகளை போதித்து கடனினூடாக தான் நினைத்ததை சாதிக்க முடியும் என்ற நிலைப்பாட்டை இலங்கையில் எடுத்திருக்கிறது. உண்மையில் இதிலே தமிழ் என்றோ சிங்களம் என்றோ முஸ்லிம் என்றோ பார்க்கக்கூடாது. அனைவரும் ஒன்றிணைந்து சீனாவினுடைய இந்த போர்ட்சிட்டி தொடர்பாகவும் சீனர்களுடைய மொழி இங்கு திணிக்கப்படுகின்றதுக்கும் எதிராகவும் நாங்கள் ஆங்காங்கே போராட்டங்களை நடத்த வேண்டும். சீன பூதகரத்தை இங்கிருந்து அகற்றுகின்ற நடவடிக்கையை எடுக்க வேண்டும். ஏதாவதொரு வகையில் சீனர்களுடைய ஆதிக்கம் இன்னும் சில வருடங்கள் வரை விட்டுவைத்தால்



இந்த மண்ணிலே கால் பதித்து பாரியதொரு சீன காலணி உருவாக்கப்பட்டு சீன கலாச்சாரத்திற்கு மாற்றப்பட்டுகின்ற சூழல் இங்கிருக்கிறது.

எனவே நாம் சிங்கள மக்களையும். முஸ்லிம் மக்களையும். தமிழ் மக்களையும் கேட்டுக்கொள்ளும் ஒரு முக்கியமான விடயம் என்னவென்றால் தற்பொழுது நாட்டுக்குள் ஒரு யுத்தம் முடிவடைந்திருக்கின்ற நேரத்தில் மீண்டும் நாங்கள் சீன அரசுடன் யுத்தம் செய்கின்ற அடுத்த கட்ட நிலவரம் அதாவது வடகிழக்கிலிருந்து தமிழ் மக்கள் ஒரு தாயகத்தை கோருகின்ற பொழுதே இந்த அரசு கொடுக்கவில்லை. ஆனால் சீனர்களை பொறுத்தவரையில் அவர்கள் பலவந்தமாக இந்த நாட்டை புடுங்குகின்ற அல்லது சீன மற்றும் பாண்டிச்சேரி போன்று தனியானதாக இல்லை. இங்கு சீன காலணி உருவாக்கப்பட்டால் சீனர்களின் வருகை மற்றும் சீன கொள்வனவு பொருட்களை கொள்வனவுசெய்ய முடியும்.இவ்வாறான வசதிகளை ஏற்படுத்துவார்கள். இதையும் நம்பி இலங்கை அரசு ஒவ்வொரு பகுதிகளையும் சீனர்களுக்கு வழங்குகின்ற ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். இதைப் பார்த்து விட்டு இந்தியா மறுமுனையிலே மறுபக்கத்தை கேட்கின்ற ஒரு சூழல் உருவாகும். கச்சதீவு பறிபோகும் அடுத்தகட்ட நிகழ்வுகளும் இருக்கின்றன.

ஆகவே நாம் துரித கதியிலே செயற்படுத்த வேண்டும். தற்பொழுது கொரோனா வைரஸை காரணம் காட்டி கொரோனா வைரஸிற்கான மருந்துகளை கொடுத்து அதற்குரிய வின்டலேட்டர்களை கொடுத்து தற்பொழுது ஏமாற்றுகின்ற நடவடிக்கைகளை சீன அரசு செய்கிறது. இதைத்தான் சந்தர்ப்பம் பார்த்து எப்பொழுது இலங்கை அரசை தன்னுடைய முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம் என்று எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றது எனலாம். இவ்வாறு சென்றுகொண்டு இருந்தால் வெகு விரைவில் சீன மொழியை படிக்க வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்படுத்தப்படும். ஒரு மசோதா கொண்டுவரப்படும் சீன மொழியை கற்காதவர்களுக்கு இனி வேலை இல்லை என்ற நிலை உருவாக்கப்படும். இவ்வாறெல்லாம் பாரியதொரு சூழலை நாம் சந்திக்க நேரிடும். ஒரு நாட்டினுடைய மொழியை படிப்பது தவறு இல்லை. ஆனால் அந்த மொழி திணிக்கப்படுகிறது. பேப்பரிலே மொழி திணிக்கப்படுகிறது. கல்வெட்டுக்களிலே மொழி திணிக்கப்படுகிறது. அவ்வாறு இருக்கின்ற பொழுது தமிழ் மொழிக்கு இல்லாத முக்கியத்துவம் சீன மொழிக்கு இந்த நாட்டிலே ஊடுருவப்போகிறது இரண்டாவது மொழியாக சீன மொழி கொண்டுவருகின்ற ஒரு அபாய நிலை தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. தெருக்களிலே வீதிகளிலே சீனர்களுடைய மொழி பொறிக்கின்ற சூழல் ஏற்படுகின்றது. இதனை கடந்த காலங்கிலே முன்னாள் அமைச்சர் ரிசாட் பதியூதின் அவர்கள் கிஸ்புல்லா அவர்கள் அரபு மொழியை இந்த நாட்டுக்குள் கொண்டு வந்து அரபு மொழியிலே எழுதப்பட்ட பெயர்ப் பலகையினை பதித்தார்கள். அதோடு அவர்கள் சஹ்ரானினுடைய அணியுடன் தொடர்புபட்டுள்ளார்கள் என தற்பொழுது கைது செய்யப்பட்டும் விசாரணைக்குட்படுத்தப்பட்டும் வருகிறார்கள்.

எது எவ்வாறிருப்பினும் சீன அரசுடன் இலங்கை அரசு மோதும் அல்லது அவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றும் என்பது இனி பகல் கனவு. ஆகவே இந்த நாட்டிலே சீனர்களுக்கு எதிராக ஒரு மக்கள் போராட்டம் வெடித்தே ஆகவேண்டும். அவ்வாறு இந்த மக்கள் போராட்டம் வெடிக்காவிட்டால் சீனர்கள் இந்த நாட்டிலிருந்து அல்லது போர்ட்சிட்டியிலிருந்து வெளியேறுவதற்கான வாய்ப்புக்களே இல்லை. இவர்களை பொறுத்தவரையில் இந்த நாட்டில் ஊடுருவல் என்பது அந்த நாட்டினுடைய தேசிய பாதுகாப்பு கடல் வளம் வான் போன்றவற்றை பாதுகாத்துக்கொள்வதற்காகவும் இலங்கை ஒரு ஆசிய பிராந்தியத்திலே திருகோணமலை துறைமுகம் கொழும்பு துறைமுகம் மற்றும் இருக்கின்ற அம்பாந்தோட்டை துறை முகம் என்பனவற்றை இவர்கள் தம்வசம் வைத்துக்கொண்டால் உலகப்போர் இடம்பெற்றாலும் கூட தமது தரையிறக்கத்தை இதுபோன்ற இடத்திலே தரையிறக்கி வெற்றி கொள்ளுகின்ற வாய்ப்புக்கள் கூட இவர்களுக்கு இருக்கின்றன. ஆகவே சீனர்கள் பொருளதார ரீதியிலே ஒரு நன்மை கருதி விடயத்தை மேற்கொண்டாலும் கூட டெக்ஸ்இல்லாத நடவடிக்கையை இந்த வியாபாரத்திலே கொண்டுவருகின்ற பொழுது இலங்கை அரசிற்கு எந்த உரிமையுமே அந்த போர்ட்சிட்டியில் இல்லை.

தொடரும்...

இரணியன்

தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## கொரோனா வைரஸிலிருந்து இலங்கையை பாதுகாக்க அரசாங்கம் அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் இல்லையேல் ஆபத்து

இன்றைய கால சூழ்நிலையில் கொரோனா வைரஸினுடைய தாக்கம் அதிகரித்து செல்லும் இந்த நிலையில் இலங்கையில் அதனுடைய வீரியம் அதிகளவில் மக்கள் பாதிப்புக்குள்ளாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனை சுகாதார அதிகாரிகள், மருத்துவர்கள், பாதுகாப்பு பிரிவினர்கள், பொலிஸ், ஜனாதிபதி, பிரதமர் உட்பட அனைவரும் தங்களது சுயலாப நடவடிக்கைகளை ஒருபுறத்தில் வைத்துவிட்டு இந்த நாட்டை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை துரிதகதியில் மேற்கொள்ள வேண்டும். நாட்டை முடக்குவது என்பது பொருளாதார ரீதியாக மறுபக்கத்தில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கும் அரசாங்கம் பதில் கூற வேண்டும். வியாபாரங்கள் நிறுத்தப்படுகின்ற பொழுது வங்கி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை சந்திக்க நேரிடும்.

அதனை சரிசெய்வதோடு அதுமட்டுமன்றி தினக்கூலி வேலை செய்வோர், தொழிற்சாலைகளில் பணிபுரிவோர், தனியார் தொழிற்சாலை இயக்குனர்கள் என பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கான அடுத்தகட்ட நகர்வை அரசு எவ்வாறு மேற்கொள்ளப்போகிறது. அன்றன்றாட வாழ்வாதாரத்தை பேணி வருகின்ற இவர்களுக்கு அரசாங்கம் நிவாரணத்தை வழங்க வேண்டும். லொக்டவுன் எடுக்கப்பட்ட காலங்களில் தனியார் நிறுவனங்களுக்கு அதனை ஊக்குவிக்கும் முகமாக வங்கி நிறுவனங்கள் கடன் வசதிகளை துரிதகதியில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்துகொடுக்க வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள் செயற்படுத்தப்படும்பொழுது தான் மக்களுடைய வாழ்வாதாரம் தனியார் நிறுவனங்களில் பொருளாதாரமும் பாதுகாக்கப்படும். ஆகவே அரசாங்கம் இதற்குரிய நடவடிக்கைகளையும் துரித கதியில் மேற்கொள்ள வேண்டும். நாட்டின் பொருளாதாரம் என்பது கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டிருப்பது நாம் அனைவரும் அறிந்ததே.

குறிப்பாக சீன நாட்டில் உருவாக்கப்பட்ட இந்த கொரோனா வைரஸ் தொடர்ந்தும் சீன நாட்டை எந்த நாட்டில் கால் பதிக்க டெம்கொடுத்ததும் அந்நாட்டு பொருட்களை இங்கு சந்தைப்படுத்துவதும் சீனாவிடம் தொடர்ந்தும் பொருளாதார ரீதியாக கையேந்துவதும் இந்த நாட்டில் உடன் நிறுத்தப்பட வேண்டும். சீனாவிலிருந்து தற்பொழுது இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அதனூடாக வேறு வைரஸ் பரப்பப்படுகிறதா? என்பதுகண்டறியப்படவேண்டும். குறிப்பாக சீன நாட்டினுடைய ஆதரவை தொடர்ந்தும் நாம் பெற்றுக்கொண்டிருப்போமாக இருந்தால் கொரோனா வைரஸ் போன்று இன்னும் பல்வேறு வைரஸினுடைய தாக்கத்தை எதிர்கொள்ள நேரிடும். இலங்கையில் வாழும் 2 கோடி மக்களுள் பல இலட்சக்கணக்கில் இழப்பை சந்திக்க நேரிடும். ஆகவே அரசாங்கமானது துரிதகதியில் நடவடிக்கையை மேற்கொள்வதுடன் அமைக்கப்பட்ட செயலணிகள் விலைபோகாத அளவில் செயற்படுகின்ற செயல் வடிவத்தை செயற்படுத்த வேண்டும். அவ்வாறு செய்வதனூடாகவே நமக்கான தீர்வை பெற்றுக்கொள்ள முடியும் என்பதே இன்றைய நிலைப்பாடு. இந்த காலகட்டத்தில் கௌரவ ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் விரைந்து செயற்பட வேண்டும் என்பது எமது வேண்டுகோள்.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**148**

மக்கள் வாழ்வித்தை நெருங்கும் போது அங்கு வேவுக்காரனை அனுப்ப வேண்டும். வேவுக்காரன் சைகை வழங்கியபின்னர் மாத்திரமே மக்கள் வாழ்விடத்தினூடாக நகர்வு மேற்கொள்ளப்படுகின்றது. எதிரியைச் சந்திக்க நேரிடும் சமயங்களில் வேவுக்காரர் குறியீட்டுச் சைகை தெரிவிக்கின்றனர். பிரதேச மக்களை வழிகாட்டியாகப் பயன்படுத்தி கெரில்லாக் குழு அந்த மக்கள் வாழ்விடத்தை விலத்திச் செல்கின்றது. ஆனால் வழிகாட்டிக்குக் குழு எங்கிருந்து வருகின்றதென்பதும் எங்கே செல்கின்றதென்பதும் தெரியக்கூடாது.

ஒரேநேரத்தில் பல குழுக்கள் நகர்வை மேற்கொள்கின்றதென்றால் அவற்றிற்கிடையில் அவசியம் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அவசியமேற்படும் போது (எதிரியைச் சந்திக்க நேரிடும் போது), அவர்கள் ஒருவருக்கொருவர் உதவியளிக்கக்கூடியவாறு இருக்க வேண்டும்.

ஓய்வெடுப்பதற்கான ஒழுங்குபடுத்தல்

கெரில்லாக்கள் இரவில் செயற்பட்டு (நகர்ந்து) பகலில் ஓய்வெடுக்கின்றார்கள். ஓய்வெடுப்பதற்காகவும் தங்குவதற்காகவும் மறைப்பான இடங்களைத்தெரிவுசெய்கின்றார்கள். அதுவும் குறிப்பாக எதிரிக்குத் தொலைவிலுள்ள காடுகள் காட்டிடைவெளிகள் போன்றன. ஓய்வெடுப்பதற்கான (தங்குவதற்கான) ,டத்தைத் தெரிவு செய்யும் போது அவ்விடத்திற்கான பாதைகளை அவதானிக்கக்கூடிய வகையில் நிலைமை இருக்கின்றதா என்பதைக் கவனத்திலெடுக்க வேண்டும். இது முற்கூட்டியே எதிரியினதோ அவனது வேவுகாரர்களதோ வரவைக் கண்டறிய உதவுகின்றது.

குழுக்கள் இருக்கின்ற இடத்தின் சகல பக்கங்களும் தற்காக்கப்பட வேண்டும். இதற்காக அவதானிப்பாளர்கள் நிறுத்தப்படுகின்றார்கள். காவல் வீரர்களைத் தவிர, வேகச் செயற்பாட்டுக் குழுவும் நியமிக்கப்படுகின்றது.

இரவு நேரத்திலேயே சில குழுக்கள் குறித்த ஒரு இடத்தில் ஓய்வெடுக்கத் தங்குவது பொருத்தமானதாகும்.

தங்குகின்ற இடத்தில் காவல் விடப்படும் போது ஒரு சோடிக் காவற்கடமையாளர்களை (அவதானிப்பாளர்களை) 50 – 100 மீற்றர் இடைவெளியைக் கொண்ட காவல் நிலைகளில் நிறுத்த ஒழுங்குபடுத்துவது அவசியமாகும்.

கெரில்லாக்களுக்கு மிக ஆபத்தானதாக எதிரியின் ஆகாயக் கண்காணிப்பு (உலங்குவானூர்திகளிலிருந்தும் விமானங்களிலிருந்தும்) விளங்குகின்றது. குறிப்பாகத் திறந்த ஆகாயத்திலிருந்து நன்றாக அவதானிக்கக்கூடிய பிரதேசத்தில் இருக்கும் போதாகும். இவ்வாறான இடத்தில் தொடர்ச்சியாக இரண்டு



இரவுகள் தங்கக்கூடாது. ஏனெனில் இந்த இடத்தை எதிரி முன்னரேயே அவதானித்திருப்பான். குழு பகலில் தங்கிய இடம் ஒருபோதும் இரவில் தங்கப்போகும் இடமாக இருக்கக்கூடாது. அவ்வாறே மறுவளத்திலுமாகும்.

திறந்த இடத்தில் தங்குகின்ற கெரில்லாக் குழுக்கள் மிக அவதானமாகவும் விழிப்புணர்ச்சியுடனும் இருக்க வேண்டும். தங்குகின்ற இடத்தில் விரும்பிய வாக்கில் நடமாடித் திரிவதும் அதனது வரம்பெல்லைக்கு வெளியே செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளதென்பதை வீரர்களுக்குக் கட்டளையாளர்கள் அவசியம் எச்சரிக்கை செய்ய வேண்டும். எதிரியின் தாக்குதலை எதிர்கொள்ள வேண்டிய சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு வீரனும் நிலையெடுக்க வேண்டிய இடத்தைத் தெரிவுசெய்திருக்கவும் வேண்டும். ஒரு பிரதேசமொன்றில் ஓய்வெடுப்பதற்காகத் தங்கியுள்ள கெரில்லாக் குழுக்கள் தங்களுக்கிடையில் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்வதுடன் அதனைத் தொடர்ச்சியாகப் பேணவும் வேண்டும்.

பரிவர்த்தனையையும் தொடர்புகளையும் ஒழுங்கமைத்தல்

பரிவர்தனைக்காகவும் தொடர்புகளை மேற் கொள்வதற்காகவும் வெவ்வேறு வகையான ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. கெரில்லாப் போராட்டத்தில் மிக நம்பிக்கையானதாக இலகுவான குறியீட்டுச் சைகைகள் விளங்குகின்றன.

குறியீட்டுச் சைகைகளைப் பின்வரும் வழிவகைகளிலும் ஊடகங்களினூடாகவும் தெரிவிக்கலாம் : சாளரங்களை (சிறிய சாளரங்கள்) மூடுதல் அல்லது திறத்தல், வெவ்வேறு வர்ணங்களிலான (சைகை வழங்குவதற்கு நியமிக்கப்பட்ட) திரைச்சீலையைப் பயன்படுத்தல்.

குறித்த இடத்தில் வழக்கமான பொருட்கள், வீட்டுப் பொருட்கள் (கைவண்டி, துவிச்சக்கரவண்டி ஆகியன) போன்றவற்றைத் தொங்கவிடல் அல்லது அவற்றை அவற்றுக்குரிய இடத்திலிருந்து அகற்றுதல்.

புகைகள், விறகெரிக்கும் நெருப்பு, மின்சூள் வெளிச்சம், வர்ணப் பொருட்களாலான துண்டுகளைக் காட்டுதல் (எறிதல்), ஆடைகளை அசைத்தல் போன்றவற்றின் மூலமும் சைகைகளை வழங்குதல் போன்றனவாகும்.

மேலே கூறப்பட்ட வழிவகைகள் மிக இலகுவானவையாகும். நியமிக்கப்பட்ட சைகைகளைக் கெரில்லாக் குழுவின் சகல உறுப்பினர்களும் அவசியம் தெரிந்திருக்க வேண்டும். எதிரி புரிந்துகொள்ளாத வகையில் சைகைகள் தெரிவிக்கப்பட வேண்டும்.

வீதிகளில் தடைகளை உருவாக்குதல்

எதிரியின் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அவசியம் வெவ்வேறு வகையிலான தடைகளைப் போக்குவரத்துப் பாதைகளில் உருவாக்க வேண்டும். இதற்காகப் பின்வரும் வழிவகைகளைக் கையாளலாம்.

மரங்களை வீதியின் (நடைபாதையின்) மறுபக்கத்திற்கு வளைத்து, அவற்றைக் கட்டுதல். இதற்காகச் சிறிய மரங்களைப் பயன்படுத்துவது சிறந்ததாகும். ஏனெனில், தடித்த மரங்களை இவ்வாறு செய்வதற்குக் கூடிய நேரமும் கணிசமான அளவு ஆட்களும் தேவையாகும்.

மூன்று கடத்திகளை உட்புறத்தே கொண்ட கடத்தியின் ஒரு முனையை மரத்தில் கட்டிவிட்டு, மறுமுனையை நிலத்தினுள் புதைத்து விடல். இங்கே கண்ணி அல்லது குண்டு வைக்கப்பட்டுள்ளதென எதிரி சந்தேகமடைவான். ,து பொய்யான பொறி என்பதை ,னங்கண்டுகொள்ள அவனுக்குக் கூடுதலான நேரம் செலவாகும்.

நீட்டியகை அகலத்திற்கு வீதியில் அகழி தோண்டுதல், எந்த நோக்கத்தில் ,து தோண்டப்பட்டுள்ளது., கெரில்லாக்களிடமிருந்து என்ன எதிர் கொள்ளப்படவுள்ளது என்பதனை அறிந்துகொள்ள எதிரி நிர்ப்பந்திக்கப்படுகின்றதுடன், நேரத்தையும் வீணாகச் செலவழிக்கின்றான்.

வெடிபொருள் அமைப்பைப் (கண்ணி, குண்டு) பொருத்துதல் - ,து எதிரியை அவதானமாகச் செயற்பட நிர்ப்பந்திக்கின்றதுடன், கண்ணியைத் தேடிக் கண்டுபிடிக்கவும் வீதியிலுள்ள கண்ணிகளை அகற்றுவதற்கும் கூடுதலான நேரத்தைச் செலவழிக்கவும் செய்கின்றது.

**நெற்றிபொறியன்**
**தொடர்வான்...**

# உலக நாட்டை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ் சீன மருத்துவரின் அதிர்ச்சி தகவல்



கொரோனா வைரஸ் குறித்து முதன் முதலில் எச்சரிக்கை விடுத்து, அந்த வைரஸாலேயே உயிரிழந்த சீன மருத்துவர் லி வென்லியாங்க். வுஹானில் உள்ள மருத்துவமனையில் பணியாற்றி வந்த மருத்துவரான லி வென்லியாங், கடந்த ஆண்டு டிசம்பர் 30 ஆம் திகதிக்கு முன்பாகவே, சார்ஸ் போன்ற புதிய வைரஸ் சீனாவில் பரவுவதாக தனது நண்பர்களிடமும், சமூக வலைத்தளங்களிலும் பகிர்ந்திருந்தார். ஆனால், லி வென்லியாங்குக்கு சம்மன் விடுத்த சீன பொலிஸார், இது போன்ற வதந்திகளைப் பரப்புவதை நிறுத்த வேண்டும் என்று எச்சரித்தனர். லி வென்லியாங் எச்சரிக்கை விடுத்தது போலவே, கொரோனா வைரஸ் சீனாவில் வேகமாகப் பரவியது. இதில் லி வென்லியாங்கின் உயிரும் பறிபோனது. இதனைத் தொடர்ந்து அவரது குடும்பத்தினரிடம் சீன அரசு மன்னிப்பு கேட்டுக்கொண்டது.

சி ஜெங்கிலி உலகின் தலைசிறந்த ஆராய்ச்சியாளர்களில் ஒருவர். சீனாவின் வெளவால் பெண் என அழைக்கப்படும் இவர் தனது வாழ்நாளில் பெரும்பகுதியை குகைகளில் வெளவால்கள் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக கழித்திருக்கிறார். சீனாவில் கொரோனா வைரஸ் தோன்றியிருக்கலாம் என சந்தேகம் எழுந்த காலகட்டத்தில் இந்த தகவலை அறிந்த ஜென் வுகானுக்கு திரும்பி வந்தார். தன்னுடைய கையில் இருக்கும் முதல்கட்ட தகவலை வைத்து இரவு பகலாக தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டார். வெளவாலுக்கு ஏற்படும் வைரஸ் குறித்து வாழ்நாள் முழுவதும் ஆராய்ச்சி செய்த இவருடைய அனுபவம் இவருக்கு கை கொடுத்தது. யுன்னான் என்ற பகுதியிலிருந்து சுமார் 1000 மயிலுக்கு அப்பால் இருக்கும் கார்ஸ்சு வெளவாலில் இருந்து ஜென் கண்டுபிடித்த வைரஸ் மாதிரியுடன் தற்பொழுது கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் ஒத்துபோவதை இவர் கண்டுபிடித்தார்.

ஒரு வைரஸின் மரபணு வரிசை மற்றும் தன்மையை கண்டுபிடித்ததன் பின்னர் தான் அதற்கான மருந்துகளை கண்டுபிடிக்க முடியும். மரபணு வரிசையை கண்டுபிடிக்க மற்றைய விஞ்ஞானிகளுக்கு பல மாதங்கள் ஏன் வருடங்கள் கூட ஆகலாம். ஆனால் ஜென் மூன்றே நாட்களில் கொரோனா வைரஸினுடைய மரபணு வரிசையை கண்டுபிடிக்கிறார். 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 1ஆம் திகதி கண்டுபிடித்தார். 2020 ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி அந்த அறிக்கையை தாக்கம் செய்தார். 2020 ஜனவரி 2 ஆம் திகதி என்பது சீனாவில் கொரோனா வைரஸ் முதன்முதலில் ஆரம்பித்த காலம். முதன்முதலில் கொரோனா வைரஸை கண்டுபிடித்த வைத்தியர் ஐ பைனோட ரிப்போர்ட் வந்த சில நாட்களிலேயே மரபணு வரிசை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஜென்னினுடைய ஆராய்ச்சி முடிவுகள் அப்பொழுது வெளிவரவில்லை. ஜென்னினுடைய வாய்கள் கட்டப்பட்டிருந்திருக்கிறது. இது எந்தளவு தூரம் திட்டமிட்டு தான் மறைக்கப்பட்டிருக்கிறது அப்படியென்றால் ஜென் தன்னுடைய கண்டுபிடிப்புக்களை தாக்கம் செய்த அதே நாளில் தான் அனைத்து மருத்துவர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் கொரோனா தொடர்பானதகவல்களைசொல்லக்கூடாது என உத்தரவு விட்டார். அதே மாதிரி கொரோனா தொடர்பான தகவல்களை வெளியில் கூறிய 8 மருத்துவர்களை சீன அரசு கைது செய்கின்றார்கள். அதை சுட்டிக்காட்டி ஜென் மிரட்டப்பட்டிருக்கிறார். ஜென்னினுடைய முடிவுகள் வந்தது 2020 ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி அதிலிருந்து 8 நாட்கள் கழித்து பாதிக்கப்பட்ட ஒருவரின் உடல் ஆராய்ச்சி செய்யப்படுகின்றது. ஜென் தலைமையில் இயங்கும் ஒரு குழு அந்த நபரின் உடலில் இருக்கும் மரபணு வரிசையை வெளியிடுகின்றார்கள். இந்த தகவல் வெளிவந்த 2 நாட்களில் ஜென்னினுடைய ஆய்வுகூடம் மூடப்படுகின்றது.

இது எந்த காலகட்டம் என்று பார்த்தால் சீனா அரசு இந்த கொரோனாவினால் யாரிற்கும் புதிதாக பாதிப்பு ஏற்படவில்லை இது மனிதர்களிடமிருந்து மனிதர்களுக்கு பறவும் நோயுமில்லை என்று சொன்ன காலகட்டம். ஆனால் அந்த நேரத்தில் பல மருத்துவர்களே இதில் பாதிக்கப்பட்டார்கள் என்பது உண்மை. சீனா தன்னுடைய CCT கான்பிரன்ஸ் நடக்க வேண்டும் என்பதில் முனைப்பாக இருந்தார்கள். ஏற்கனவே வைத்தியர் ஐபைனும் CCT கான்பிரன்ஸிற்காக தான் இந்த தகவல் மறைக்கப்பட்டது என்றும் குற்றம் சாட்டியிருந்தார்கள்.



தற்பொழுது ஜென்னும் அதே குற்றச்சாட்டைத் தான் வைத்தார். இவர்கள் CCT கான்பிரன்ஸ் நடத்த வேண்டும் என்றதும் சீன புத்தாண்டிலும் தான் இவர்கள் முக்கியமாக இருந்தார்கள் அதே போன்று சீனாவினுடைய அதிபர் வைரஸ் அதிக பாதிப்பை ஏற்படுத்தாது இதை சரிபடுத்திவிடலாம் என நம்பிக்கொண்டு இருந்ததாக ஜென் தெரிவிக்கின்றார். அந்த வகையில் இந்த CCT கான்பிரன்ஸ் நடந்து முடிந்ததன் பின்னர் தான் உலகிற்கு இந்த கொரோனா வைரஸின் தீவிரத்தைப்பற்றி சீனா எடுத்துரைத்தது. ஆனால் ,தை சொல்வதற்கு முன்னராகவே ஜனவரி 14 ஆம் திகதி ஜென் தனது இணையத்தள வகுப்பில் மாணவர்களுக்கு இந்த வைரஸ் தாக்கத்தைப் பற்றி எடுத்து கூறினார். யுன்னா கார்சோ என்ற வெளவால் உடலில் இருக்கும் மரபணு வரிசையுடன் 96 சதவீதம் இந்த கொரேனாா வைரஸ் ஒத்துப்போகுதாம் கடந்த 30 ஆண்டுகளில் வெளவால்களினால் தான் மக்களுக்கு பெரும் வைரஸ் ஏற்பட்டிருக்கிறது என ஜனவரி 23 ஆம் திகதி வெளிவந்த ஒரு சயன்ஸ் மகசீனில் சொல்லியிருக்கிறார் ஜென். ஆசியாவின் மிகப்பெரும் வைரஸ் சேமிக்கும்வங்கியில்வைரஸ்தொடர்பான ஆராய்ச்சியும் நடந்து கொண்டு இருந்தது. கொரோனா வைரஸ் அங்கிருந்து தான் பரவியதாக ஒரு தரப்பு குற்றச்சாட்டு வைத்தார்கள். ஜென்னுக்கு முதன்முதலில் இந்த கொரோனா தொடர்பாக கோல் போகும் போதும் கூட ஜென்னும் அது லாபில் இருந்து தான் வெளி வந்திருக்கலாம் என சந்தேகப்பட்டதாக தெரிவித்தார். இதன் மூலம் கொரோனா வைரஸ் வுகான் இன்ஸ்ரிடியுட் ஒப் வைராலஜியில் ஆராய்ச்சி செய்யுப்படுவதும் அதன் மியூட்டேடுசன்சை இவர் கண்காணித்துக்கொண்டு இருப்பதையும் ஜென்னினுடைய சந்தேகத்தை வைத்து புரிந்துகொள்ள முடியும். சார்ல்ஸ் வைரஸ் உருவான காலத்தில் வெளவால்கள் மூலம் சீனர்கள் உண்ணும் துணுக்குப் பூனையால் தான் இந்த வைரஸ் பரவியது என கண்டுபிடித்த ஒரு குழுவில் ஜென்னும் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. வெளவால்கள் மூலம் மனிதர்களுக்கு வைரஸ் ஏற்படும் வாய்ப்பு இருக்கிறதாக பல நாட்களாக ஜென் கூறிக்கொண்டிருந்தார்.

ஆனால் வுகானில் இவ்வளவு குறுகிய நேரத்தில் இவ்வளவு பெரிய வைரஸ் வரும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. மேலும் கார்சு வெளவால்கள் இருக்கும் கிராம மக்களின் நோய் எதிர்ப்பு சக்தியை இவர் இன்னும் ஆராய்ச்சி செய்துகொண்டு இருக்கின்றார். அந்த ஆராய்ச்சி இன்னும் தொடருவதன் மூலம் இதற்கான மருந்துகள் கண்டுபிடிக்கலாம் இதற்கொரு தீர்வு ஏற்படலாம் என்று அவர்கள் நம்புகின்றார்கள். நாகரீகம் இல்லாத வாழ்க்கையை கொண்ட இந்த மக்களுக்கு இயற்கை கொடுத்த தண்டனை தான் இந்த கொரேனாா வைரஸ் என ஜென் தனது சமூக வலைதளங்களில் கருத்தை பதிவு செய்திருந்தார். இந்த கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. சொந்த நாட்டு மக்களே இவரை கடுமையாக விமர்சனம் செய்தார்கள். ஆனால் வாழ்க்கையையே வைரஸ் ஆராய்ச்சிக்காக அர்ப்பணித்த எனக்கு தெரியும் வைரஸ் எவ்வாறு பரவும் என்று அவ்வாறு பதிலடி கொடுத்தார் ஜென். உலகில் சமூக தொற்று ஏற்படும் முன்பே வைரஸின் மரபணு வடிவம் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. அப்பவே தேவையான உதவிகளை அவருக்கு கொடுத்திருந்தால் முதலில் இதற்கு மருந்து கண்டுபிடித்திருக்கலாம். அல்லது இதனை சமூக தொற்று ஏற்படுத்துவதற்கு முன்னரே இதன் தீவிரத்தை எடுத்துக் கூறி இதனை கட்டுப்படுத்தியிருக்கலாம். இறுதியாக கொரோனாவை போன்று கொரேனாாவை விட பல வலிமையான வைரசுகள் எதிர்காலத்தில் மைனர்களை தாக்க வாய்ப்பு இருக்கிறதாக ஜென் தெரிவித்தார்.

# முஸ்லிம்களை சீண்டிப்பார்ப்பது இலங்கை அரசுக்கு ஆபத்து

வியாபார நோக்கில் இலங்கைக்குள் உள்நுழைந்த முஸ்லிம்கள் தற்பொழுது தனியலகு கோருகின்ற அளவுக்கு இன்றைய நவீன உலகில் அவர்களுடைய வளர்ச்சி என்பது இலங்கையில் ஒரு ஹாசாவை உருவாக்கும் நிலை தோற்றுவிக்கப்பட்டாலும் அதில் அச்சம் கொள்ளத்தேவையில்லை. சீனக் காலணியாக இலங்கை மாறிவருகின்ற அதே நேரத்தில் முஸ்லிங்களின் அதிவேக இனப்பெருக்கம் 2040 ஆம் ஆண்டளவில் பெரும்பான்மை இனமாக மாறக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

குறிப்பாக காத்தான்குடி, புத்தளம், திகன, பேருவெல, நிந்தவூர், பொத்துவில், மருதமுனை, சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களில் செறிந்து வாழ்ந்து வரும் முஸ்லிங்கள் சராசரி 10 க்கு மேற்பட்ட குழந்தைகளை பெற்றெடுக்கின்றார்கள். இதனை தவறு என்று கூறிவிடமுடியாது. ஆனால் இந்த வளர்ச்சியை கட்டுப்படுத்தும் நோக்கில் எவர் செயற்பட்டாலும் அது தவறான விடயமே. ஆனால் தமிழ் மற்றும் சிங்களவர்களுக்கு கருத்தடை மாத்திரைகள் கலந்து முஸ்லிம் உணவகங்களில் கொடுத்து வந்தமையும் இதனால் ஒருசில உணவகங்கள் மூடப்பட்டமையும் முஸ்லிங்கள் மத்தியில் அரசாங்கத்திற்கிடையில் சந்தேகத்தை வலுப்படுத்திய ஒரு விடயம். யுத்தம் முடிந்த பின்னர் தமக்கான ஒரு தனி அலகை கோரி நின்றமை அவ்வாறானதொரு நிலையில் தமக்கான ஒரு தீவிரவத குழுவை சஹரான் தலைமையில் உருவாக்கியமை அதுமட்டுமன்றி தேவாலயங்களில் ஈஸ்டர் ஆராதனை அன்று தற்கொலைத் தாக்குதலை நடத்தியமை முஸ்லிங்கள் தமக்கான தனி அலகை நிலைநிறுத்த போகின்றார்கள் என்ற சந்தேகம் அரசாங்கத்திற்கு துப்பரியும் தகவலாக கிடைத்தது. அதன் பின்னரே அரசாங்கம் தமக்கு சாதகமானவர்களை மட்டும் வைத்துக்கொண்டு ஏனைய முஸ்லிங்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்காது வெறும் பாராளுமன்ற உறுப்பினர்களாக நடத்தினார்கள்.

குறிப்பாக அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்ற கட்சிக்கு தலைமை தாங்குகின்றவர்கள் அரச ஒட்டுண்ணிகளாக கடந்த காலங்களில் செயற்பட்டவர்கள் இன்று தாம் உணர்ந்தவர்கள் போல நாடகமாடிய பொழுதிலும் அவர்களுடன் சேர்ந்திருப்பவர்களை அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதற்காக அல்லது இதுவரை ஆதரித்ததற்காக விடை கொடுத்து அனுப்பியவர்கள். ஆகவே இவர்கள் சுயநல அரசியலை மேற்கொண்டு வருகிறார்கள். பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டத்தில் பங்கெடுத்த ஒருசில முஸ்லிங்கள் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்கு முறைக்கு கோசங்களை எழுப்பவில்லை. மாறாக முஸ்லிங்களின் ஜெனாசா எரிப்பு விவகாரம் தொடர்பில் கோசங்களை எழுப்பியிருந்தார்கள்.

புர்கா மற்றும் 18 வயதுக்கு குறைந்த திருமணம், களால் போன்ற விடயங்களுக்கு அரசாங்கத்தினால் தடை விதிக்கப்பட்டுள்ளது. காரணம் குர்காவை அணிந்து தீவிரவாதிகளாக நடமாடினால் கூட இவர்களை கண்டுபிடிக்க முடியாது. கடந்த காலங்களில் அவ்வாறு நடந்தது. தமிழ் பெண்களை முஸ்லிம் மதத்திற்கு



மதம் மாற்றி வெகுமதிகளை கொடுத்து அவர்களின் மதம்சார்ந்து போதனைகளை வலுக்கட்டாயப்படுத்தி இந்த பெண்களை தற்கொலை தாரிகளாக தயார்ப்படுத்துகிறார்கள். இந்த பூலோகத்தில் ஹாபியர்களை கொன்றால் சொர்க்கத்தில் 72 கன்னிகைகளுடன் பாலியல் உல்லாசம் அனுபவிக்கலாம் என்ற தப்பான மத போதனை ஆண், பெண் இருபாலார் மத்தியிலும் ஒரு குழப்ப நிலையை உருவாக்கி இவ்வாறான தற்கொலை தாக்குதலுக்கு தூண்டப்படுகிறார்கள். அவ்வாறின் முஸ்லிங்கள் தவிர்ந்த ஏனைய மதத்தவர்கள் முஸ்லிம் மதத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அல்ஹாவின் கருத்தின்படி அவர்கள் கழுத்துவெட்டப்படுவார்கள் என்று குர்ஆன் கூறியிருக்கிறது என்பது இவருடைய கருத்து.

ஆனால் இதனை பலரும் மறுக்கிறார்கள். இவர்கள் இஸ்ரேலின் கைக்கூலிகள் என்றும் கூறுகின்றார்கள். எது எவ்வாறிருப்பினும் 18 வயதிற்கு குறைந்தவர்களை பாலியல் பாண்டியவர்களாக பயன்படுத்துவதும் குறித்த வயதினரை தற்கொலை தாரிகளாக நியமிப்பதும் இவர்களுக்கு பிறந்த குழந்தைகளை கண், கிட்னி போன்றவற்றை எடுத்து விற்பனை செய்வதையும் இவர்கள் குறியாக செயற்பட்டுவந்தமை கண்டறியப்பட்டுவந்தது. வெளிநாட்டில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாக ஒருசிலரை அழைத்து இலங்கையின் வேறு இடங்களுக்கு கொண்டு சென்று வீடுகளில் பூட்டி வைத்து சித்திரவதை செய்த கொடுமைகளும் இடம்பெற்று வந்திருக்கிறது. இதனூடாக இவர்கள் இலங்கையில் சாதிக்க நினைத்தது என்ன என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது.

முஸ்லிங்களை பொறுத்தவரையில் அவர்களின் மத நம்பிக்கை பாராட்டத்தக்கது. ஆனாலும் அல்ஹாவின் பெயரால் இடம்பெறும் கொலைகள் ஆடு மாடுகளை வெட்டுவதற்கும் அல்ஹாவை பயன்படுத்தும் முறைகள் தவறானது. அதுமட்டுமன்றி பொருளாதார ரீதியாக ஏனையவர்களை வீழ்த்தி தமது பொருளாதாரத்தை மேம்படுத்திக்கொண்டு சென்றவர்களும் இவர்களால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட முக்கிய சவாலாகும். குறிப்பாக இலங்கை முஸ்லிங்கள் அரசாங்கத்தினால் தாக்கப்படும் பொழுது எந்த முஸ்லிம் நாடுகளும் குரல் கொடுக்கவில்லை. ஜெனாசா எரிக்கப்படுகின்ற பொழுதும் குரல் கொடுக்கவில்லை. காரணம் இங்கிருக்கும் முஸ்லிங்களை முஸ்லிங்கள் என ஏனைய நாடுகள் பொருட்படுத்தவில்லை. ஆனால் ஹாசாவில் இருக்கின்ற முஸ்லிங்கள் மீது தாக்குதல் இடம்பெற்ற பொழுது அரபிக் நாடுகள் உட்பட ஆசிய நாடுகள் உள்ளடங்களாக 54 நாடுகள் ஒரே தடவையில் குரல் எழுப்பின. இதில் துருக்கி தலைமை தாங்கிக்கொண்டு ஈரான் இஸ்ரேல் கைலாகு கொடுத்து வரவேற்புக்களும் இடம்பெற்றது.

தற்போதைய சூழ்நிலையில் ,துவொரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பென அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இது போன்று இலங்கைத்தீவிலும் இனிவரும் காலங்களில் முஸ்லிம் மக்களிற்கு எதிராக இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் துன்புறுத்தல்களை அல்லது அவர்கள் மதத்திற்கு விரோதமான செயற்பாடுகளில் ஈடுபடுவார்களாக இருந்தால் இலங்கை மீது ஹமாஸ் தீவிரவாதிகள் போன்று ஆங்காங்கே தாக்குதல் இடம்பெறும் சூழலும் உருவாக்கப்படலாம் என்ற சந்தேகமும் தற்பொழுது பரவலாய் எழுந்துள்ளது. இலங்கைத் தீவை முஸ்லிங்களுக்கு என்றும் சிங்களவர்களுக்கு என்றும் தமிழர்களுக்குஎன்றும் பரங்கியருக்குமாக பங்கு போட முடியாது. ஒரே நாட்டுக்குள் தமிழர் தாயகப் பகுதிகளில் சிங்களவர்கள் பெற்றெடுக்கின்ற அதே சுதந்திரத்தோடு தமிழ் மக்களும் அதே பிரதேசத்தில் வாழ்வதற்கும் அரசாங்கம் அனுமதியளிக்க வேண்டும். தொடர்ந்தும் முஸ்லிங்களுக்கும் பரங்கியர்களுக்கும் தனியலகு வழங்குவதாக இருந்தால் அதுபெரும் சர்ச்சையில் தான் முடிவடையும்.

இலங்கையின் பரப்பளவு 65 ஆயிரத்து 610 சதுர கிலோமீற்றர்களாகும். இதனை பல கூறுகளாக பிளவுபடுத்துவது என்பது அரசாங்கம் ஒருபோதும் விரும்பப்போவதில்லை. 30 வருட காலங்கள் போராடிய தமிழினத்திற்கே வடகிழக்கை பிரித்துகொடுக்க தயங்கும் இந்த அரசு முஸ்லிங்களுக்கான தனியலகை எந்த காலத்திலும் வழங்கப்போவதில்லை.

தமிழினத்தின் போராட்டத்தை தொடர்ந்தும் காட்டிக்கொடுத்தவர்களாகவே தமது சுயநல அரசியலுக்காக முஸ்லிங்கள் இன்னும் செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றார்கள். எது எவ்வாறிருப்பினும் முஸ்லிம் அரசியல்வாதிகளை பொறுத்தவரையில் சுயலாப அரசியலுக்காக விட்டுக்கொடுக்கின்றோம் என்ற போர்வையில் காட்டிக்கொடுக்கும் அரசியலையே அவர்கள் தொன்றுதொட்டு செய்துவருகின்றார்கள்.

இதனை மாற்றியமைக்கும் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். காலத்துக்கு காலம் அரசியல் மாற்றங்கள் நிகழ்வது வழக்கம். தற்பொழுது இலங்கை வாழ் முஸ்லிங்களின் நிலைமையை பொறுத்தவரையில் பயங்கரவாதிகளுடன் தொடர்புடைய அரசியல் தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். அரசாங்கம் இவர்கள் மீது இவ்வாறான குற்றச்சாட்டுக்களை தொடர்ந்தும் மேற்கொண்டுவருகின்றது. இவ் நிலைமை தொடருமாக இருந்தால் அரசாங்கத்தின் மீது பகைமை உருவாகி முஸ்லிங்களுக்கான ஒரு தனியலகு உருவாக்கப்பட்டு இஸ்லாமிய தேசமாக மாற்றப்படும் சூழ்நிலை உருவாகும்.

ஆகவே முஸ்லிங்களை சீண்டாது இருப்பது இந்த அரசாங்கத்திற்கு நல்லது என்று இவர்கள் அச்சுறுத்தல்களும் விடுத்துள்ளனர். ஆனால் இவர்கள் தமிழ் பேசும் மக்களாக தமிழினத்துடன் ஒன்றிணைந்து செயற்பட்டால் வடகிழக்கில் நிம்மதியான ஒரு இனமாக தமிழ் பேசும் மக்கள் வாழக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படும். இல்லையேல் தீவிரவாத தாக்குதல் இவர்களால் உருவாக்கப்படலாம்.

**நெற்றிப்பொறியன்**

# இலங்கையில் ஊடக சுதந்திரம்

உலகில் மிக பயங்கரமான. அச்சுறுத்தல் நிறைந்த தொழில் எது என்று கேட்டால் எந்தவித சந்தேகமும் இல்லாமல் சொல்லக்கூடியது ஊடகவியல் தான். இலத்திரன் ஊடகங்கள் ,பத்திரிகை என்ற இரண்டுமே இந்தக் காலகட்டத்தில் அநேகமான நாடுகளில் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் எல்லோரும் அறிந்ததே.

வருடாந்தம் எத்தனை ஊடகவியாளர்கள் கைது செய்யப்படுகிறார்கள். எத்தனை பேர் தண்டனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். எத்தனைபேர் சித்திரவதை,மனித உரிமை மீறல்களுக்கு உட்பட்டுள்ளார்கள்.எத்தனை அப்பாவி ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.சர்வதேசரீதியாக என்னதான்மனித உரிமை,மனிதாபிமானம் என்னும் குரல்கள் ஓங்கி ஒலித்தாலும் பேனாக்கள்,கமெராக்கள்,ஒலிவாங்கிகளின் கழுத்துகள் நெரிக்கப்பட்டு,திருகப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

தகவல்களை வெளியிடும் அறியும் உரிமைகள் பல்வேறு காரணங்கள் சொல்லி ஒடுக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இலங்கையில் மட்டும் அண்மைக்காலத்தில் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் எத்தனை பேர்? மனதில் பல நல்லவர்கள்,தூய மனம் படைத்த தியாகிகள் வந்து போகின்றனர். பல பேர் அங்கவீனர்களாயுள்ளனர். எழுதும் கைகள் முறித்துப் போடப்பட்டுள்ளன. பல பேர் மிரட்டலிலேயே அடங்கி தம் எழுத்துக்கள்,கருத்துக்களை முடமாக்கியுள்ளனர். இன்னும் பலர் புலம்பெயர்ந்து விட்டார்கள்.இப்படியான ஊடகங்களின் மீது,ஊடகவியலாளரின் மீது மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகள்,உரிமை மீறல்கள் தொடர்பாக தொடர்ந்து குரல் எழுப்பிவரும் ஒரு அமைப்பு தான் எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு.Reporters Without Borders (Reporters Sans Frontiers) இந்த RSF எனப்படும் அமைப்பு எனக்கும் மறக்கமுடியாத அமைப்பு ஒன்று.கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நான் கைது செய்யப்பட்ட வேளையில் எனக்காகக் குரல் எழுப்பியதோடு, பல்வேறு அறிக்கைகளையும் வெளியிட்டிருந்தது. நான் விடுவிக்கப்பட்ட பின்னரும் பல உதவிகளை செய்யமுன்வந்திருந்தது.பிரான்ஸ்வருமாறும் அழைத்திருந்தது. எனினும் அவற்றை நன்றிகளோடு நான் மறுத்திருந்தேன்.

பிரான்சில் இருந்து இயங்கி வரும் இந்த அமைப்பு ஒவ்வொரு வருடமும் உலகில் நிகழ்ந்த சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு உலகம் முழுவதிலும் உள்ள ஊடகவியலாளர்களிடமும் ஊடகத்துறைப் பிரதிநிதிகளிடமும் எடுக்கும் தரவுகளின் அடிப்படையில் ஊடக சுதந்திரம் பற்றிய அறிக்கை ஒன்றை வெளியிட்டு வருகிறது. இதில் புள்ளிகள்,புள்ளி விபரங்களின் அடிப்படையில் ஊடக சுதந்திரம் மதிக்கப்படும் நாடுகளும், ஊடக சுதந்திரம் நசுக்கப்படும் நாடுகளும் பட்டியலிடப்படுகின்றன. இந்த ஆண்டில் வெளியிடப்பட்ட பட்டியலில் ஊடக சுதந்திரம் மதிக்கப்படும் நாடுகளின் பட்டியலில் ஒரே புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்துள்ள ஐந்து நாடுகளுமே ஐரோப்பிய நாடுகள். இவற்றுள் நான்கு பால்கன் நாடுகள். டென்மார்க்,பின்லாந்து,அயர்லாந்து, நோர்வே, ஸ்வீடன். கடந்த ஆண்டில் முதலாவது இடத்தில் இருந்த ஐஸ்லாந்து இம்முறை ஒன்பதாம் இடத்தில். இம்முறை எடுக்கப்பட்ட கணிப்புக்கள் அனைத்தும் 2008ஆம் ஆண்டு செப்டம்பர் முதலாம் திகதியிலிருந்து கடந்ததாண்டு ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதிவரை பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டவை. மிக மோசமாக ஊடகங்கள்,ஊடகவியலாளர்கள் மிதிக்கப்படும்,நசுக்கப்படும் நாடாக ஆபிரிக்க நாடான எரித்ரியா(175ஆம் இடம்) காணப்படுகிறது. இதற்கு அடுத்தபடியாக வட கொரியா, துருக்மெனிஸ்தான் ஆகிய நாடுகள் உள்ளன. அண்மையில் பதவிக்கு மீண்டும் வந்த ஈரான் ஜனாதிபதியான மகுமூது அகமதிநிஜாடின் பிடியில் ஈரான் ஊடகவியாலலர்கள் அனுபவிக்கும் கொடுமைகள் ஈரானுக்கு அடுத்த இடத்தை (172)வழங்கியிருக்கின்றன. தொடர்ந்து மியான்மார், கியூபா, லாவோஸ்,சீனா, யேமென் என்று செல்லும் இந்த வரிசையில் இலங்கைக்கு 162ஆம் இடம் கிடைத்துள்ளது. கடந்த ஆண்டுகளை விட இலங்கை முன்னேற்றம் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்தமுறை 165ஆம் இடத்திலிருந்தது. எனினும் தற்போதைய கணிப்பு எடுக்கப்பட்ட காலப் பகுதியில் தான் லசந்த விக்ரமதுங்க கொலை, திஸ்ஸநாயகத்துக்கான தண்டனை, போத்தல ஜயந்த மீதான தாக்குதல், மற்றும் பல ஊடகவியலாளரின் கைதுகள் பல்வேறு செய்தி இணையத் தளங்கள் மூடப்பட்டதும், இடம்பெற்றுள்ளன.பல முக்கிய ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு பிறதேசம் போயிருக்கிறார்கள். அப்படியிருந்தும் மூன்று ஸ்தானங்கள் உயர்ந்துள்ளது என்றால் மற்றைய நாடுகளில் இடம்பெறும் ஊடகங்களின் மீதான அடக்குமுறைகள் பற்றி நினைக்கவே பயமாக இருக்கிறது.


இன்னும் சில அவதானிப்புக்கள்..

ஒபாமா(அதான் நோபெல் பரிசை இம்முறை பெற்றாரே அவரே தான்) ஜனாதிபதியான பின்னர் நீண்ட காலத்தின் பின் அமேரிக்கா முன்னேற்றம் கண்டு இருபதாம் இடத்துக்குள் வந்துள்ளது. ஐக்கிய ராஜ்ஜியமும் அதே இடத்தில்..அதுசரி இரண்டு நாடுகளும் கொள்கை பொதுவாகவே ஒன்று தானே.. இந்தியா 105ஆம் இடத்திலும், பாகிஸ்தான் 159ஆம் இடத்திலும், ஈராக் 145ஆம் இடத்திலும் இருக்கின்றன.

**என்ன தான் பேனாக்கள் வாள்முனையை விடக் கூர்மையானவை என்று கூறப்பட்டாலும், துப்பாக்கிகள் சூடாகவே பேனாக்களையும்,ஒலிவாங்கிகளையும், கமெராக்களையும் மட்டுமல்ல இணையங்களையும் குறிவைத்தவண்ணமே உள்ளன.**

RSF போன்றவற்றின் குரல்கள் கொஞ்சமாவது உலகுக்கு இவற்றை வெளிப்படுத்தி வருகின்றன என்பது ஒரே ஆறுதல்.. ஊடகங்கள் இப்போது சமமான வளர்ச்சியின் மையத்தில் உள்ளது . ஊடகங்கள்மூலம் ஊழலை அம்பலப்படுத்த முடியும். அரசாங்க நடவடிக்கை குறித்து கவனத்தை ஈர்ப்பதன் மூலம் அவர்கள் பொதுக் கொள்கையை சரிபார்க்க முடியும். சீர்திருத்தம் குறித்து மாறுபட்ட கருத்துக்களைக் கூற மக்களை அனுமதிக்க முடியும் .மேலும் மாற்றத்தைக் கொண்டுவர பொது ஒருமித்த கருத்தை உருவாக்க உதவமுடியும். மறுபுறம் இத்தகைய ஊடகங்கள் வர்த்தக சந்தைகள் சிறப்பாக செயல்பட உதவுகின்றன. அவை வர்த்தகத்தை எளிதாக்கலாம், அரசியல் கருத்துக்கள் மற்றும் புதுமைகளை எல்லைகளுக்குள் கடத்தலாம். , மனித வளர்ச்சிக்கும் ஊடகங்கள் முக்கியம். அனுபவம் காட்டியுள்ளபடி, ஊடகங்களின் சுதந்திரம் எளிதில் சமரசம் செய்யப்படலாம். வளர்ச்சியை ஆதரிக்க, ஊடகங்களுக்கு சரியான சூழல் தேவை இது பல்வேறு சூழ்நிலைகளில் வளர்ச்சி விளைவுகளை ஊடகங்கள் எவ்வாறு பாதிக்கிறது என்பதை விவாதிக்கிறது . இது கல்வியாளர்களின் கருத்துக்களையும், முன் வரிசையில் உள்ள பத்திரிகையாளர்களிடமிருந்து வரும் கண்ணோட்டங்களையும் ஒன்றாக இணைக்கிறது. 80பதுகள் வரை ஊடகம் என்பது நடுநிலை நேர்மை தன்மை உண்மைத்தண்மை என்பவற்றை கொண்டு காணப்பட்டது .

இன்று உலகிலுள்ள பெரும்பாலான தொலைக்காட்சி சனல்கள் பத்திரிக்கைகள் வேறுவகை காட்சி ஊடகங்கள் எல்லாம் கார்ப்பரேட் முதலாளிகள் முதலாளிகளின் மற்றும் அரச முதலாளிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டன. எதை நியாயம், நேர்மை என்று



கருதுகின்றறோமோ, எழுதுகின்றோமோ அதையே தன்பக்க நியாயங்களை போல எடுத்துரைத்து எமது நேர்மையான எண்ணங்களைக் கூட மாற்றி விடும் வல்லமை இந்த ஊடகங்களுக்கு இன்று உண்டு . ஒரு காலத்தில் ஊடகம் என்பது நேர்மையாக, பக்கச்சார்பற்றதாக காணப்பட்டது என்பது உண்மைதான். எதற்கும் அடிபணியாத செய்தி பத்திரிக்கையாளர்கள் அப்போது காணப்பட்டார்கள். இன்று அந்த நிலை காணாமல் போய்விட்டது. காப்ரேட் கம்பெனிகள் கோடிக்கணக்கான பணத்தை வாரி இறைத்து தங்கள் விருப்பம் ,எண்ணம் ,தேவை அவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஏற்ற வகையில் ஊடகங்களை தன்வசப்படுத்திவைத்துள்ளன.இதற்குஒருபடி மேலாக அரச முதலாளிகளே ஊடகங்களை தனது சொந்த முதலீட்டில் வைத்துள்ளனர் மற்றும் அவற்றின் பணிப்பாளர்களாககூட உள்ளனர் .

எனவே அரசியல் மற்றும் சமூக பொருளாதார செய்திகளில்உண்மைத்தன்மைஎதுவென்ற நம்பகத்தன்மையில் மீது சந்தேகம் அடிக்கடி தோன்றுகின்றது. தகவலறியும் உரிமை என்பது பொய்த்துப்போயுள்ளது. ஊடகங்கள் கூறுவதை நம்பாத மக்கள் இன்று பொதுவெளியில் நிறையாவே காணப்படுகின்றனர். எனவே மாற்று ஊடகங்களாகிய முக நூல்கள், மின்னஞ்சல், வட்ஸ்அப் போன்றவற்றை பெரிதும் நம்புகின்றனர்.

ஆனால் இதுவரை இவையெல்லாம் எவ்வித கட்டுப்பாடும் இன்றி சுதந்திரமாக செயல்பட்டு வந்தன. இப்போது நிலைமை மாறிக்கொண்டிருக்கின்றன. அவற்றின் வீச்சினை கண்டு குழப்பமடைந்த அரசமுதலாளிகள் அவற்றிலும் தமது கட்டுப்பாடுகளை ஏற்படுத்திவருகின்றன அவற்றின் மீதும் தனது தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. இலங்கையில் கூட பல சந்தர்ப்பங்களில் முகநூல்கள் அண்மையில் முடக்கப்பட்டன. தனக்குத் தேவையான போது தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் சகல இலத்திரனியல் ஊடகங்களையும் கட்டுப்படுத்துகின்ற நிலைமை இப்போது காணப்படுகிறது.

விக்கிலீக்ஸ் மூலம் இரகசிய இராஜதந்திர கேபிள்களை வெளியிட்டபோது மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியதுடன், சமூக ஊடகங்களின் புதிய சக்தியிலிருந்து தாங்கள் பாதுகாப்பாக இருப்பதாக நினைத்த அனைவருக்கும் திடீரென விழித்தெழுந்த சூழலை அது வழங்கியது. விளைவுகள் வெறும் சங்கடத்திற்கு அப்பாற்பட்டவை துனிசியா முதல் "அரபு வசந்த" எழுச்சியைத் தூண்டுவதற்கு அவை உதவின. மேலும் பிற வகையான சமூக ஊடகங்கள் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கா பிராந்தியத்தில் பிற இடங்களில் மக்கள் எதிர்ப்பைத் தக்கவைக்க அவை உதவின. எல்லா இடங்களிலும் மேற்குலகம் மற்றும் அமெரிக்கா தமது அரசியல் நிகழ்ச்சி நிரல்களை மேம்படுத்துவதற்கான புதிய திறனை ஒன்லைனில் தொடர்புகொள்வது நிரூபிக்கப்பட்டுள்ளது. இது மக்களின் உண்மைத்தன்மையுடன் கூடிய போராட்டங்களை திசைதிருப்புகின்றன. எனவே தான் அரபுவசந்தம் முற்றுபெறாமலே முடிவுற்றது .

கார்ப்பரேட் ஊடகங்களின் பரவலான பயன்பாடு சமூக நிகழ்ச்சி நிரல்களை மாற்றுவதற்கான சம ஆற்றலைக் கொண்டுள்ளது. மறுபுறம் மூலதன சந்தையில் அதிருப்தி அடைந்த ஊழியர்களால், திருப்தி மற்றும் வேதனை அடைந்த நுகர்வோர், போட்டியாளர்களால், மற்றும் பங்குதாரர்களால் சில்லறை மற்றும் நிறுவனவாரியங்களுடனானமோதல்களில் இவை பயன்படுத்தப்படுகின்றன. ஒரு காலத்தில் பாதுகாப்பாக தனியுரிமமாக இருந்திருக்கக்கூடிய தகவல் மையங்கள் இப்போது ஒரு பொது நிறுவனத்தின் எல்லைகளிலிருந்து வெளிப்பாட்டையாக அரசு முதலாளிகளின் இருப்பிடமாக மாறிவிட்டன. ஒரு காலத்தில் எளிதாகவும் அமைதியாகவும் நிர்வகிக்கப்பட்டிருக்கக்கூடிய ஊடகங்கள் இப்போது கார்ப்பரேட் முதலாளிகளின் தவறான கருத்துக்கள் நெருக்கடிகளில் பெரிதாகிவிடும். மிகக் குறைவான பங்குகளைக் கொண்ட பங்குதாரர்கள் கூட இப்போது மிகக் குறைந்த செலவில் பரந்த கிளர்ச்சியைத் தூண்டலாம் என்ற நிலை தோன்றிவிட்டது. மேலும், ஊடகங்களுக்கான அணுகலின் உலகளாவிய தன்மையைக் கருத்தில் கொண்டு, நிறுவனங்கள் வீட்டிற்குள் எங்கு வேண்டுமானாலும் நுழையலாம். ஏற்கனவே ஊடகங்கள் இனி நுகர்வோர் மேம்பாட்டு கருவிகள் அல்ல அவை நவீன வணிக செயல்பாட்டு சூழலில் புதிய இருப்பு. அவர்கள் வழங்கும் "பிராண்ட்" உருவாக்கும் வாய்ப்புகள் கிட்டத்தட்ட வரம்பற்றவை. அவர்கள் அறிமுகப்படுத்தும் அபாயங்கள் விரிவானவை. அவை நற்பெயர்கள் முதல் மதிப்பு முன்மொழிவுகள் வரை அனைத்தையும் பாதிக்கின்றன. பல கார்ப்பரேட் தலைவர்கள் இதில் , அவர்கள் ஓரளவு மர்மமாகவே இருக்கிறார்கள். குடும்பங்களால் கட்டுப்படுத்தப்படுகின்றனவா அல்லது பரவலாக நடத்தப்படுகின்றனவா என்பது முக்கியமல்ல சமூகங்களை முழுதாக கட்டுப்படுத்த முயல்கின்றன.

சமூக வலைப்பின்னல்கள் என்பது கொள்முதல் முடிவுகள் பெருகிய முறையில் எடுக்கப்படும் இடங்கள், முதலீட்டு வாய்ப்புகள் பெருகிய முறையில் இவைகள் எடைபோடப்படுகின்றன, மற்றும் , சமூக ஆர்வலர்கள் அவர்களின் நிகழ்ச்சி நிரல்களுக்கு பொது ஆதரவைப் பெறுகின்றன. ஆனால் அதில் உண்மை இருந்தபோதிலும், சமீபத்திய தகவல்கள் சமூக ஊடக சிக்கல்களில் இயக்குனர் ஈடுபாட்டிற்கும் அவர்களின் நிறுவனங்களில் சமூக ஊடகங்களின் தாக்கத்திற்கும் இடையே ஒரு குறிப்பிடத்தக்க பிளவைக் குறிக்கின்றன.

தொடரும்...
மறவன்

# தமிழினம் தனது இலக்கை அடையும் வரை எமது வரலாற்றினை தொடர்ச்சியாக இளம் தலைமுறையினருக்கு கடத்துவோம்

தமிழர் தேசம் ஆண்டாண்டு காலமாக தொடர்ச்சியாக சிங்கள தேசத்தின் இனவழிப்பிற்கும் அடக்குமுறைக்கும் உள்ளாகிக்கொண்டே வருகின்றது. இதன் உச்சக்கட்டமாக 2006ம் ஆண்டு ஆரம்பித்த ஆக்கிரமிப்பு 2009ம் ஆண்டு அதியுச்சம் பெற்றது. இந்த இறுதியுத்தத்தின் போது 1,47,679 பொது மக்கள் கொல்லப்பட்டு அல்லது காணாமல் ஆக்கப்பட்டனர் என்பதை மறைந்த ஆயர் வணக்கத்திற்குரிய இராயப்பு ஜோசப் அவர்கள் புள்ளிவிபரங்கள் மூலம் ஆதர பூர்வமாக நிறுவினார்.




**இறுதி ஆறு மாதங்களில் மட்டும் எழுபதினாயிரத்துக்கு (70,000) மேற்பட்ட எமது உறவுகள் கொல்லப்பட்டதை ஐ.நா. செயலாளர் நாயகத்தின் உள்ளக மீளாய்வுக்குழுவின் 2012 கார்த்திகை மாத அறிக்கையில் தெரிவித்துள்ளார். கைக்குழந்தைகள், சிறுவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டனர். மனித குல மாண்புகளின்றி குழந்தைகள் கூட பிடித்து சுட்டு கொன்றும், பெண்கள் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டும் கொலை செய்யப்பட்டனர்.**

2017 ஆம் ஆண்டு மாசி மாதம் உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேசக் கருத்திட்டமானது (**ITJP**). தமிழ்ப்பெண்கள் "பாலியல் அடிமைகளாக" கையாளப்பட்டு ஶ்ரீலங்கா இராணுவத்தினரால் நடாத்தப்பட்ட "பாலியல் வன்முறை முகங்கள்" பற்றிய விபரங்களை ஐ.நா.விடம் கையளித்தது. ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய அலுவலகத்தின் 2013 சித்திரை மாதத்திற்குரிய அறிக்கைக்கு அமைவாக, தமிழர் தாயகத்தில் 90,000க்கும் மேற்பட்ட யுத்தமூல விதவைகள் உள்ளனர்.

மிகப்பெரும் மனித பேரவலத்துடனும். மனித உயிரிழப்புகளுடனும் யுத்தம் மௌனிக்கப்பட்டாலும், தமிழினத்தின் மீதான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு தொடர்ந்த வண்ணமே உள்ளது. இவ்வாறு நீண்ட நெடிய காலமாக இனவழிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருக்கும் எம்மினதிற்கான நீதி தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்றது. சிறுவர்கள், பெண்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்களை கொன்று குவித்து எமது தேசத்தை ஆக்கிரமித்தது மட்டுமல்லாது தொடர்ந்தும் எமது மக்களை அடிமைகளாக ஒடுக்குவதிலேயே சிங்கள அரசு குறியாக உள்ளது.

உரிமை கேட்டு போராடிய எமது இனம் இன்று கொல்லப்பட்ட தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தவும், நினைவேந்துவதற்கும் போராடவேண்டி உள்ளது. தொடர்ச்சியாக எமது நிலங்களை தொல்பொருள் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம், நிலவள திணைக்களம், பௌத்த சாசன அமைச்சு மற்றும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக பௌத்தமயமாக்கல், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்ளும் சிங்கள அரசானது, தமிழர் தேசத்தினை சிங்கள மயப்படுத்துவதிலேயே முனைப்புடன் செயற்படுகின்றது. தமிழ் இனத்தின் இருப்பினை இத்தீவிலே கேள்விக்குறியாக்கிக்கொண்டிருக்கும் சிங்கள அரசானது மறுபுறத்தே திட்டமிட்ட முறையில் தமிழினம் தமது அரசியல் அபிலாசைகள், அரசியல் தீர்வு நோக்கி சிந்திக்காத வண்ணம் தமிழர் தேசம் எங்கும் பிரச்சனைகளையும் கவனச் சிதறல்களையும் உருவாக்கிக்கொண்டே உள்ளது.

முள்ளிவாய்க்காலில் நடந்தேறிய மனித பேரவலம், தமிழினத்தின் மீதான இனவழிப்பின் ஆரம்பமோ! முடிவுமோ! அல்ல. நீண்ட தொடரான இனவழிப்பின் ஓர் அங்கமே. இத்தொடரான இனவழிப்பிலிருந்து எமமினத்தை பாதுகாக்க சர்வதேச நீதி பொறி முறையின் மூலம் நீதி வழங்கப்படுவதுடன், மீள நிகழாது இருப்பதை உறுதி செய்ய சர்வதேசத்தினால் நடாத்தி கண்காணிக்கப்படும் வடக்கு கிழக்கு தழுவிய சர்வசன வாக்கெடுப்பின் மூலம் நிரந்தர அரசியல் தீர்வு எட்டப்படவேண்டும்.



இதற்கான ஆரம்ப புள்ளியாகவே தமிழ் மக்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற (**ICC**) விசாரணையை வலியுறுத்தி தொடர்ச்சியாக போராடி வருகின்றனர். தமிழினத்தின் விடுதலைக்கான திறவுகோல் முள்ளிவாய்க்கால் மண்ணிலிருந்தே மீண்டெழும் எனும் பொதுக் களத்தில் ஒன்றிணைத்து பயணிக்க தமிழினம் இந்நாளில் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.


தமிழினத்தின் மீதான இனவழிப்பை நினைவேந்தும் இந்நாளில், அநியாயமாக கொல்லப்பட்ட எமது உறவுகள் அனைவருக்கும் சிரம் தாழ்த்தி வணக்கங்களை செலுத்துகின்றோம். கொல்லப்பட்ட உறவுகளை நினைவேந்தும் விதமாக முள்ளிவாய்க்கால் மண்ணில் பொது கட்டமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வுகள் காலை 10.30 இற்கு இடம்பெற்றன இதில் கொவிட் 19 விதிமுறைகளைப் பின்பற்றி கலந்து கொள்ளுமாறு வேண்டி நின்றோம். அத்துடன் தமிழர் தாயகம் எங்கும் முள்ளிவாய்க்கால் பொதுக்கட்டமைப்பினால் மற்றும் வடக்கு கிழக்கு தமிழ் ஆயர்களினால் விடுக்கப்பட்ட அழைப்பின் பிரகாரம் மே 18 மாலை 6 மணி மணியோசையின் பின் அகவணக்கம் செலுத்தி, வீடுகளின் முன் விளக்கேற்றி எமமினத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட, தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற இனவழிப்பினை நினைவு கூர்ந்து அந்நாளில் காலை உணவினை தவிர்த்து, மதிய வேளையில் உப்பில்லாத முள்ளிவாய்க்கால் கஞ்சியினை உங்கள் வீடுகளில் பரிமாறி எமது துயரங்களையும், வடுக்களையும், நினைவுகளையும், வரலாறுகளையும் அடுத்த சந்ததிக்கு தமிழினம் தனது இலக்கை அடையும் வரை கடத்துமாறு அனைவரையும் வேண்டி நின்றோம்.

**வரலாறே எமது வழிகாட்டியாக உள்ளதால் எம்மினத்தின் வரலாற்றினை இளைய சந்ததிக்கு கடத்துவதினை இனத்திற்குரிய கடமையாக நாம் ஒவ்வொருவரும் தவறாது நிறைவேற்றுவோம்.**

**வேலன் சுவாமி**



# பிராந்தியச் செய்திகள்



## கொரோனா நோயாளர்கள் தொடர்பில் சுற்றுநிரூபம்

வைத்தியசாலைகளுக்கு அழைத்துவரப்படும் நோயாளர் ஒருவர் 15 முதல் 30 நிமிடங்களுக்குள் அனுமதிக்கப்பட வேண்டும் என சுகாதார அமைச்சு அறிவித்தது.

இது தொடர்பான சுற்றுநிரூபம் வெளியிடப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் ஈடுபட்டு கைது செய்யப்பட்ட 10 பேருக்கும் 14 நாட்கள் விளக்கமறியல்

மட்டக்களப்பு கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள நாகர்வட்டை கடற்கரையில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு கடந்த 18 ம் திகதி தீபச் சுடர் ஏற்றிய சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 10 பேரையும் எதிர்வரும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு வெள்ளிக்கிழமை (21) திகதி வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.



கடந்த 18 ம் திகதி நீதிமன்ற தடை உத்தரவை மீறி கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள நாகர்வட்டை கடற்கரையில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு தீபச் சுடர் ஏற்றி கடலில் பூக்களைத் தூவி அஞ்சலி செலுத்திய அதனை படம் எடுத்து முகநூலில் பதிவு செய்த 10 பேரை பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் பொலிசார் கைது செய்தனர். குறித்த நினைவேந்தல் நிகழ்வை தலைமைவகித்து செய்திருந்த லவக்குமார் என்பவருக்கு நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்டு அவருடைய வீட்டிற்கு 3 தடவைகள் பொலி சார் சென்ற போது அவர் வீட்டில் இல்லாத நிலையில் அவரின் மனைவியார் அதனை பெறமாட்டேன் என தெரிவித்த நிலையில் அவரின் வீட்டின் கதவில் அந்த நீதிமன்ற தடை உத்தரவை பொலிசார் ஓட்டியுள்ளனர்

இந்த நிலையில் நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்ட லவக்குமார் 10 பேருடன் சென்று நாகர்வட்டை கடற்கரையில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு தீபச்சுடர் ஏற்றி அதன் பின்னர் பூக்களை கடலில் தூவினர் இதனை படம் எடுத்து முகநூலில் பதிவேற்றம் செய்துள்ளனர். இதில் கைது செய்யப்பட்டவர்களை 3 நாள் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியினை பெற்று தடுப்பு காவலில் வைத்து விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில் வெள்ளிக்கிழமை வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது அவர்களை 14 நாட்டகள் விளக்கமறியில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

## 39 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது

யாழ். தொண்டமானாறு - ஊரிக்காடு கடற்கரையில் 131.8 கிலோகிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. அன்றிரவு (22) 10.30 மணியளவில் சைக்கிளில் ரோந்து பணிகளில் ஈடுபட்டிருந்த கடற்படையினரால் இந்த கேரள கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. 4 பொதிகளில் பொதியிடப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா தொகை சுமார் 39 மில்லியன் ரூபா பெறுமதியுடையவை என மதிப்பிடப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை. கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா, கடற்படையினரால் எரியூட்டப்பட்டது.

## கொழும்பின் தொடர்மாடிகளை டிரோன்கள் மூலம் கண்காணிக்கின்றோம்- பொலிஸ் பேச்சாளர்



தனிமைப்படுத்தல் விதிமுறைகைள மீறுபவர்களை கண்காணிப்பதற்காக டிரோன்களை பயன்படுத்துவதாக தெரிவித்துள்ள பொலிஸார் தொடர்மாடிகளை டிரோன்களை கண்காணித்துவருவதாக தெரிவித்துள்ளனர். கொழும்பிலும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள தொடர்மாடிகளை கண்காணிப்பதற்கு ஆளில்லா விமானங்களை பயன்படுத்தவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார் விதிமுறைகளை மீறிய 369 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

## 25 ஆம் திகதி வீடுகளிலே இருக்குமாறு அறிவுறுத்தல்

எதிர்வரும் 25 ஆம் திகதி பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதன் பின்னரும் வீடுகளிலேயே தங்கியிருக்கமாறு கொவிட் ஒழிப்பு தொடர்பிலான தேசிய செயலணி தெரிவித்துள்ளது. மிக அருகிலுள்ள விற்பனை நிலையங்களில் பொருட்கொள்வனவில் ஈடுபடுவதற்கு மாத்திரம் சந்தர்ப்பம் வழங்கப்படும் என செயலணியின் தலைவர், இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பயணத் தடை தளர்த்தப்படுவது உணவுப்பொருட்கள் மற்றும் ஔடதங்கள் போன்ற அத்தியாவசியமான பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளிப்பதற்காக மாத்திரமே என அவர் வலியுறுத்தியுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை(21) இரவு 11 மணியிலிருந்து நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்ட பயணத் தடை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (25) அதிகாலை 04 மணிக்கு தளர்த்தப்பட்டு அதேநாள், இரவு 11 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும்.



பயணத் தடை தளர்த்தப்படுமே அன்றி நீக்கப்படமாட்டாது என இராணுவத் தள-பதி தெரிவித்துள்ளார். பயணத் தடை தளர்த்தப்படுகின்ற காலப்பகுதிக்குள் உணவுப்பொருட்கள் மற்றும் மருந்தகங்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் போன்ற அத்தியாவசியமான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களை மாத்திரமே திறந்து வைப்பதற்கு வாய்ப்பளிக்கப்படவுள்ளது. அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு வீட்டிலிருந்து ஒருவர் மட்டுமே வெளியில் செல்ல வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

## வானிலை முன்னறிவிப்பு: பலத்த மழை மற்றும் காற்று தொடர்பில் எச்சரிக்கை

நாட்டின் பல பகுதிகளிலும் மழையுடனான வானிலை நிலவி வருகின்றது. மேல், சப்ரகமுவ, மத்திய, வட மேல் மற்றும் தென் மாகாணங்களில் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.



இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் மணித்தியாலத்திற்கு 40 முதல் 50 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும் வடக்கு, வட மத்திய, வட மேல் மற்றும் ஊவா மாகாணங்களிலும் மணித்தியாலத்திற்கு 50 முதல் 55 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும் என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டது. இதனிடையே, நாட்டைச் சூழவுள்ள கடற்பிராந்தியங்களில் கடற்றொழில் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என வளிமண்டலவியல் திணைக்களம் மீனவர்களை அறிவுறுத்தியுள்ளது.

## மின்னல் தாக்கிய 17 தொழிலாளர்கள் வைத்தியசாலையில் அனுமதி

கொட்டகலை - டிரேட்டன் தோட்டத்தில் மின்னல் தாக்கிய 17 பேர், கொட்டகலை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அன்று (23) காலை தேயிலைத் தோட்டத்தில் தொழில் புரிந்துகொண்டிருந்த ஆண் தொழிலாளர்களே இவ்வாறு மின்னல் தாக்கத்திற்கு இலக்காகியுள்ளதாக வைத்தியசாலை வைத்திய அதிகாரி சாவித்ரி ஷர்மா தெரிவித்துள்ளார்.






## கமல் படத்தில் இருந்து விலகிய முக்கிய பிரபலம்

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் கமல் ஹாசன் நடித்து வரும் படம் விக்ரம். இது கமல் ஹாசனின் 232வது திரைப்படம். மாஸ்டர் படத்தை தொடர்ந்து லோகேஷ் கனகராஜ் இயக்கும் இப்படத்திலும், அனிருத் தான், இசையமைத்து வருகிறார்.

இயக்குனர் லோகேஷ் கனகராஜ் தனது முதல் படத்தில் இருந்து ஒரே தொழில்நுட்ப குழுவுடன் தான் பணியாற்றி வருகிறார். தற்போது அவர் இயக்கத்தில் உருவாக உள்ள 'விக்ரம்' படத்திலும் அதே தொழில்நுட்ப குழுவுடன் தான் பணியாற்ற உள்ளதாக அறிவித்திருந்தார்.

இந்நிலையில் தற்போது அப்படத்தில் இருந்து ஒளிப்பதிவாளர் சத்யன் சூரியன் விலகி உள்ளாராம். மாநகரம், கைதி, மாஸ்டர் போன்ற படங்களில் பணியாற்றிய சத்யன் சூரியன், கால்ஷீட் பிரச்சனை காரணமாக விக்ரம் படத்தில் இருந்து விலகிவிட்டாராம். அவருக்கு பதிலாக விஜய்யின் சர்கார் படத்தில் பணியாற்றிய கிரிஷ் கங்காதரனை ஒப்பந்தம் செய்துள்ளதாக கூறப்படுகிறது.



## ரோஜா சீரியல் ரசிகர்களுக்கு சூப்பர் குட்டி நியூஸ் சொன்ன சிப்பு



சன் தொலைக்காட்சியில் நிறைய சீரியல்கள் ஒளிபரப்பாகிறது. ஆனால் இப்போது ஹிட்டாக ஓடுவது ரோஜா சீரியல் தான். இந்த சீரியல் தமிழில் ஒளிபரப்பாகும் சீரியல்களிலேயே முதல் இடத்தில் உள்ளது, அதுவும் பல மாதங்களாக இருக்கிறது என்பது தான் சீரியலின் ஸ்பெஷல். இதனால் கதையாசிரியர் ரோஜா சீரியலின் கதையை பார்த்து பார்த்து எழுதி வருகிறார். இந்த சீரியலில் கடந்த சில நாட்களாக நாயகன் சிப்புவின் காட்சிகள் எதுவும் வரவில்லை.

ரசிகர்கள் இதுகுறித்து இன்ஸ்டா பக்கத்தில் கூறி வருத்தப்பட தற்போது சிப்பு ஒரு பதிவு போட்டுள்ளார். அதில் ரசிகர்கள் என்னை திரையில் கடந்த சில நாட்களாக மிஸ் செய்தீர்கள். ஆனால் அடுத்த வாரத்தில் இருந்து சூப்பரான நீதிமன்றம் காட்சியுடன் உங்களை சந்திக்க வருகிறேன் என சந்தோஷ செய்தியை பதிவு செய்துள்ளார்.

## ரீமேக் படத்தில் நடிக்க மறுத்த ராஷ்மிகா

தமிழ், தெலுங்கு, இந்தி என பல்வேறு மொழி படங்களில் பிசியான நடிகையாக வலம்வரும் ராஷ்மிகா, ரீமேக் படத்தில் நடிக்க மறுத்துவிட்டாராம்.

கன்னடத்தில் வெளியான 'கிரிக்பார்ட்டி' படம் மூலம் ஹீரோயினாக அறிமுகமான ராஷ்மிகா மந்தனா. தற்போது தெலுங்கு, தமிழ், இந்தி என பல்வேறு மொழி படங்களில் நடித்து வருகிறார். சமீபத்தில் இவர் தமிழில் நடிகர் கார்த்தியுடன் 'சுல்தான்' என்ற படத்தில் நடித்து பிரபலமடைந்தார்.



இதனிடையே நடிகை ராஷ்மிகா 'கிரிக் பார்ட்டி' படத்தின் இந்தி ரீமேக்கில் நடிக்க இருப்பதாக தகவல்கள் பரவின. அதற்கான பணிகளும் நடந்து வருவதாக கூறப்பட்டன.

இந்த நிலையில் 'கிரிக் பார்ட்டி' படத்தின் இந்தி ரீமேக்கில் தான் நடிக்கவில்லை என்று நடிகை ரஷ்மிகா மந்தனா சமீபத்திய பேட்டியில் தெரிவித்துள்ளார். ரீமேக் படம் என்பதால் அவர் அப்படத்தில் நடிக்க மறுத்துவிட்டதாக கூறப்படுகிறது. நடிகை ராஷ்மிகா, தற்போது தெலுங்கில் நடிகர் அல்லு அர்ஜுன் ஜோடியாக புஷ்பா படத்திலும், இந்தியில் நடிகர் சித்தார்த் மல்ஹோத்ரா ஜோடியாக 'மிஷன் மஜ்னு' படத்திலும், அமிதாப் பச்சனுடன் ஒரு இந்தி படத்திலும் நடித்து வருகிறார்.

## வெளியானது சூர்யா 39 படத்தின் புதிய அப்டேட்!



நடிகர் சூர்யா தற்போது தமிழ் சினிமாவின் முன்னணி நடிகராகவும் மிக சிறந்த நடிகர்களில் ஒருவராகவும் விளங்குபவர்.

அந்த வகையில் இவர் நடிப்பில் கடைசியாக வெளியான சூரரை போற்று திரைப்படம் சிறந்த விமர்சங்களை பெற்று வெற்றியடைந்தது. அதனை தொடர்ந்து சூர்யா இயக்குனர் ஞானவேல் இயக்கத்தில் சூர்யா 39 படத்தில் நடித்து வருகிறார்,

மேலும் தற்போது இப்படம் குறித்த புதிய அப்டேட் ஒன்று வெளியாகியுள்ளது.

ஆம், கொடைக்கானலில் நடந்து வரும் இப்படத்தின் ஷூட்டிங் கிட்டத்தட்ட முடிந்துவிட்டதாம். வக்கீலாக வரும் சூர்யாவின் கதாபாத்திரம் மிகவும் சக்திவாய்ந்ததாக இருக்குமாம்.

மேலும் இப்படத்தில் பழங்குடினரின் வாழ்க்கை கஷ்டங்கள் குறித்து பேசப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## இந்த சீரியல் நடிகை பிக்பாஸ் 5வது சீசனில் வரப்போகிறாரா?

விஜய் தொலைக்காட்சியில் பல சர்ச்சைகளுக்கு நடுவில் தொடங்கப்பட்ட பிரம்மாண்ட நிகழ்ச்சி பிக்பாஸ். முதல் சீசனிற்கு ஏகப்பட்ட எதிர்ப்பு, பிரச்சனை எல்லாம் வந்தது.

அது முடிந்து அடுத்தடுத்து நிகழ்ச்சி நடந்து விரைவில் 5வது சீசன் தொடங்கவுள்ளது. கடந்த சில நாட்களாகவே தமிழ் பிக்பாஸ் 5வது சீசன் குறித்த பேச்சுகள் வருகின்றன.

விஜய் தொலைக்காட்சியில் ஓடிக் கொண்டிருக்கும் அன்புடன் குஷி சீரியலில் முன்பு நாயகியாக நடித்துவந்த ரேஷ்மா பிக்பாஸ் 5வது சீசனில் வரப்போகிறார் என செய்திகள் வர ஆரம்பித்தன.

செய்திகளை பார்த்த ரேஷ்மா, அன்புடன் குஷி சீரியலில் இருந்து வெளியேறிய பின் நிறைய கதைகள் கேட்டு வருகிறேன், விரைவில் சந்தோஷ செய்தி வரும்.

ஆனால் நான் பிக்பாஸ் 5வது சீசனில் கலந்துகொள்ள போவதாக வரும் செய்திகள் முற்றிலும் வதந்தியே என கூறியுள்ளார்.



தொகுப்பு :- ஹாசினி




# பொலிவான சருமத்தை பெற எளிமையான அழகு குறிப்புகள்



சிலருக்கு நகைகள் அணிவதால் கழுத்தில் கருவளையம் ஏற்படலாம். இதைப் போக்க, கோதுமை மாவில் வெண்ணையைக் கலந்து கழுத்தைச் சுற்றி பூசவும் 20 நிமிடங்கள் கழித்துக் குளிக்கவும். இப்படி தினசரி செய்து வந்தால் கழுத்தில் உள்ள கருவளையம் அகன்றுவிடும்.

மஞ்சளை அரைத்துப்பூசினால் தான் அழகு கிடைக்கும் என்றில்லை. மஞ்சள் கலந்த நீராவி கூட அழகைக் கூட்டும். மூன்று கப் தண்ணீரை கொதிக்க வையுங்கள். பசும் மஞ்சள் கிழங்கு ஒன்றை அரைத்து அதன் சாறை எடுத்து, கொதி நீரோடு கலந்து ஆவி பிடியுங்கள். அடுத்து ஒரு கைப்பிடி அளவு துளசியைப் போட்டு ஆவி பிடிக்க வேண்டும்.

பிறகு 3 எலுமிச்சை இலை அல்லது அரை மூடி எலுமிச்சை சாறு சேர்த்து ஆவி பிடியுங்கள். இத்தனையும் ஒன்றன் பின் ஒன்றாக செய்து முடித்ததும், கடைசியில் ஐஸ் கட்டியை முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் தேயுங்கள். (சருமத் துவாரங்கள் விரிவடையாமல் இருக்க ஐஸ் ஒத்தடம் அவசியம்) பின்னர், ஏதேனும் ஒரு ஃபேஸ் பேக்கை பூசி முகத்தை அலசுங்கள்.

கறுப்பு டீ தயாரித்துக் கொள்ளுங்கள். அது குளிர்ந்ததும் அதில் பஞ்சை நனைத்துப் பிழிந்து கண்களின் மேல் வையுங்கள். புதினா சாற்றை கண்களைச் சுற்றி தடவி வர, கண்களை சுற்றிய கருவளையங்கள் நாளாடைவில் மறையும்.

முட்டை வெள்ளைக்கருவுடன் ஆலிவ் எண்ணெய் கலந்து முகத்தில் மேல்நோக்கி மசாஜ் செய்யயும். கால் மணி நேரம் கழித்து கழுவினால் உங்கள் முகம் ஜொலிக்கும்!

வேகவைத்த உருளைக்கிழங்கு, மசித்த ஆப்பிள், ஆரஞ்சு பழச்சாறு, கொஞ்சம் சர்க்கரை ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து உடலெங்கும் பூசி, குளித்து வந்தால் மென்மையான, பொலிவான சருமத்தை பெறலாம்.

கடுகு எண்ணெயை சூடாக்கி பாதங்களில் தடவி பின்னர் இளஞ்சூடான நீரில் கால்களை வைத்திருக்கவும். தொடர்ச்சியாக செய்தால் பாத வெடிப்புகள் மறையும்.

## உதட்டினை சிவப்பாக வைத்துக்கொள்ள சில டிப்ஸ்

சிலருக்கு உதடுகள் கருமையாக இருக்கும், சிலருக்கு உதடுகள் வறண்டு இருக்கும். இது ஒரு சில ஊட்டச்சத்து குறைபாடுகள் மற்றும் சில பழக்கங்களால் ஏற்படுகிறது.

வறண்ட உதடுகளைக் கொண்டவர்கள் நாள்தோறும் உதடுகளின்மேல் வெண்ணெய் தடவி வந்தால் வறண்ட உதடுகள் மாறி வழவழப்பான அழகான உதடாகும்.

கொத்துமல்லி இலைகளின் சாற்றை எடுத்து தினமும் இரவு படுக்கைக்குச் செல்லும்முன் உதடுகளில் தடவி வந்தால் உதடு சிவப்பாகும்.

தேங்காய் எண்ணெயில் அரை டீஸ்பூன் சாதிக்காய் பொடியைச் சேர்த்து குழைத்து உதடுகளின் மேல் தடவி வந்தால் உதடுகள் சிவந்து, பளபளப்பாக காட்சியளிக்கும்.

பீட்ரூட் பழத்தின் சாற்றை உதடுகளின் மீது பூசி வந்தால் உதடுகள் அழகாகும். மாதுளம் பழத்தின் சாறும் உதடுகளை அழகாக்கும்.

பெட்ரோலியம் ஜெல்லி உதடுகளை மென்மையாக்க உதவும் மிக சிறந்த பொருளாகும். தினசரி பெட்ரோலியம் ஜெல்லியை உதடுகளில் தடவி வந்தால் உதடுகள் மென்மையாக மாறும்.



வாரம் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு உதடுகளை வெதுவெதுப்பான மற்றும் குளிர்ந்த தண்ணீரால் ஒத்தடம் கொடுத்து வந்தால் அவை ரோஜா போல மென்மையாக மாறும்.

உதடுகளைக் கடிக்கும் பழக்கம் சிலருக்கு உண்டு. அது தவிர்க்கப்படவேண்டிய பழக்கம். அதனால் உதடுகள் வறண்டு போகவும், நிறம் மாறி அசிங்கமாகக் காட்சியளிக்கவும் கூடும். எனவே இது தவிர்க்கப்பட வேண்டும்.

## சூடான நீரை அடிக்கடி குடிப்பதால் இத்தனை நன்மைகளா...?

வெந்நீர் குடித்தவுடன், நம் உடல் வெப்பநிலை உயர்கிறது. அது உடனடியாக வியர்வையாக உடம்பை விட்டு வெளியேறுகிறது. இதனால் உடம்பில் உள்ள நச்சுத் தன்மைகள் அனைத்தும் வெளியேற்றப்பட்டு, உடல் சுத்தமாகிறது. வெந்நீருடன் சிறிது எலுமிச்சைச் சாற்றை சேர்த்துக் கொண்டால் இன்னும் அதிக பலன் கிடைக்கும். பருக்கள் படாதபாடு படுத்தும். எண்ணெய் மற்றும் தூசுகள் படிவதால்தான் பெரும்பாலும் பருக்கள் உருவாகின்றன. இந்தப் பருக்களை விரட்ட தொடர்ந்து வெந்நீரைக் குடித்து வாருங்கள். முகமும் பொலிவடையும்.

அடிக்கடி வெந்நீர் குடிப்பதால் முடிகள் நன்றாக வளர்வதுடன், முடிகளின் வேர்களும் சுறுசுறுப்பாகி, மேலும் முடிகள் வளர வழி வகுக்கும்.

நம் உடலில் இரத்த ஓட்டம் சீராக இல்லையென்றால், அது பலவிதமான உடல் நலக் குறைவுகளை ஏற்படுத்தும். ஆனால், வெந்நீரைத் தொடர்ந்து குடித்து வந்தால், இரத்த ஓட்டம் சீராகும். மேலும் நரம்பு மண்டலத்தின் ஓரத்தில் தேங்கியுள்ள தேவையில்லாத கொழுப்புக்களும் வெந்நீரில் கரைந்து விடும்.

இரத்த ஓட்டத்தைப்போலவே குடல் இயக்கமும் சரியாக இருந்தால்தான் நாம் ஆரோக்கியத்துடன் இருக்க முடியும். மலச்சிக்கலும் நீர்ச்சத்து குறைவும் குடல் இயக்கத்துக்கு முக்கிய எதிரிகள். மிதமான சூட்டில் நீரை தினமும் காலையில் காலி வயிற்றில் குடித்து வந்தால், குடல் இயக்கம் அதிகரிக்கும்.

தினமும் காலையில் மிதமான சுடுநீரைக் குடித்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும். கொழுப்புக்கள் சரசரவென்று குறைந்து, எடையும் குறையும். ஒரு சொட்டு எலுமிச்சை சாற்றையும் சுடுநீருடன் சேர்த்துக் கொண்டால் அது உடம்பில் மேலும் கொழுப்பு சேர விடாமல் தடுக்கும்.

மாதவிடாய் ஏற்படும் நாட்களில் பெண்கள் பெரிதும் அவதிப்படுவார்கள். அந்த சமயங்களில் சூடான நீரை அடிக்கடி குடித்து வந்தால், மாதவிடாயினால் ஏற்படும் வலி வெகுவாகக் குறையும்.

உடலிலும் சருமத்திலும் தேவையில்லாமல் இருக்கும் நச்சுப் பொருட்கள் தான் விரைவில் வயதான தோற்றம் உருவாவதற்கு காரணம். வெந்நீர் குடிப்பதால் அத்தகைய நச்சுப் பொருட்கள் விரைவில் வெளியேறிவிடும். இதனால் வேகமாக வயதாவது குறையும்.

தொகுப்பு :- ஹாசினி

# முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியூதின் ஒரு பயங்கரவாதி



கடந்தவார தொடர்ச்சி...

இதனை அரசாங்கம் தான் திட்டமிட்டு முஸ்லிம்களிடையே ஒரு பிரிவினையை ஏற்படுத்த வேண்டும் என்று செய்தது என்று அவர் தெட்டத்தெளிவாக கூறியிருந்தார். அது ஆதாரபூர்வமாக எங்களிடம் காணொளிகள் இருக்கின்றன. ஆகவே ஒருவகையிலே இந்த நாட்டின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வழிகளாக உள்ளூர் உற்பத்திகளை பெருக்கி அந்நிய செலாவாணியை குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்றார் அது பாராட்டத்தக்க விடயம்.

ஆனால் முஸ்லிம்களின் தீவிரவாத நடவடிக்கையை வைத்தோ எமது போராட்டம் இந்த நாட்டிலே 30 ஆண்டுகள் தாயகம் தேசியம் சுயநிர்ணய உரிமை என்பனவற்றிற்காக போராடப்பட்ட போராட்டத்திற்கான தீர்வை அது வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை அல்லது தமிழ் மக்கள் தமக்கான சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கான உரிமையை நிச்சயம் அவர் வழங்க வேண்டும்.

அல்லது அடுத்த ஆண்டுகள் அரசாங்கத்தின் தலைமைகள் மாறினாலும் தமிழ் மக்களுக்கான தீர்வை வழங்க வேண்டும். அவர்கள் தமிழ் மக்கள் தமிழினத்திற்காக போராடியவர்கள் ஒருபோதும் தீவிரவாதிகள் அல்ல எனவும் நாங்கள் கூறிக்கொண்டு இந்த இஸ்லாமிய முற்போக்குத் தீவிரவாதிகளுடைய செயற்பாடுகள் காலப்போக்கில் அல்-கைதா வினுடைய செயற்பாடுகளை இந்த நாட்டுக்குள் கொண்டு வந்து சீரழிப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றமையினால் இங்கிருக்கக்கூடிய இஸ்லாமியர்களையும் ஒரு நாடு என்ற வகையில் அணைத்துச் செல்வது அல்லது அரவணைப்பது அவர்களுடன் மீண்டும் மீண்டும் ஒரு அழுத்தத்தை கொடுப்பதனூடாக அரசாங்கமே இந்த நாட்டுக்குள் அல்லது இதனை சுற்றுநோக்கும் இந்த பூகோள அரசியல் ஒரு தீவிரவாத போக்கை இந்த நாட்டுக்குள் உருவாக்கி மீண்டும் ஒரு இரத்த கறையை ஏற்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டை அவர்கள் கொண்டு வரவிருக்கின்றார்கள். ஆகவே நாம் அவதானமாக நாங்கள் செயற்பட வேண்டும்.

## சிறந்த அறிவுரை வரிகள் ; தமிழ் தத்துவங்கள்

பிரச்னை என்பது தொலைநோக்கி போலவே நீ பார்க்கும் பார்வையில் தான் எல்லாம் அடங்கி இருக்கிறது அதை பெரிதாக நினைத்தால் பெரிதாகத்தான் தோன்றும் சிறியதாக நினைத்தாள் பிரச்னை உனக்கு ஒரு பொருட்டாகவே தெரியாது.

பணம், பொருள் என இந்த இரண்டுமே வாழ்க்கையில் மனிதனின் சந்தர்ப்ப சூழ்நிலைகள் மற்றும் குணத்தையே மாற்றும் வல்லமை படைத்தது

உணர்ச்சிகள் என்ற ஒன்றை உனக்கு அடக்க தெரிந்தால் வாழ்க்கையில் வரும் அனைத்து கஷ்ட நஷ்டங்களாலும் உன்னை ஒன்றும் செய்து விட முடியாது.

இன்பமே கடைசி வரைக்கும் நிலைக்க வேண்டுமென்று எண்ணாதே அனைத்தும் மாறும் நீ கண்ணிமைக்கும் நேரத்தில். இன்பம் என்றுமே என்னை விட்டு நீங்க கூடாதென எண்ணி வாழ்வது கூட மனதில் இன்பம் நம்மை விட்டு நீங்கி விடுமோ என்று நீ நினைக்கும் ஒரு துன்பம் தான்

நேர்மையான குணம் கொண்டவர்களுக்கு என்றுமே இந்த உலகில் மதிப்பு இல்லை தான் ஆனால் நிற்சயமாக உன் நல்ல மனதுக்காக அந்த இறைவனின் பரிசு கட்டாயம் கிடைக்கும்.

பகையை வளர்க்காமல் எல்லோரிடமும் பொறுத்து போகிறவர்களுக்கே இங்கு கோமாளி, முட்டாள், பிழைக்க தெரியாதவன் என்ற பெயர் கிடைக்கிறது

வாழ்க்கையில் ஜெயிக்க வேண்டும் என்ற சிந்தனை உனக்குள் வந்து விட்டாலே பொறுப்பு என்பது தன்னாலே அமைந்து விடுகிறது

அடுத்தவர் ஆயிரம் வழிகளில் வாழலாம் ஆனால் உனக்கென சிறந்த வழியை நீ தேர்ந்தெடுக்கும் வரையிலும் வெற்றி என்பது உனக்கு ஒரு கிடைக்காத பொக்கிஷமே.

லட்சியம் என்ற ஒன்று எதுவும் இல்லாதவன் இந்த உலகை ஜெயிக்க தகுதி இல்லாதவன்

பட்டை தீட்ட தீட்ட தானே தங்கம் உருவாகும் அதுபோலவே வாழ்க்கையின் இன்னல்களை கடந்து வந்தால் மட்டுமே உன் சாதனை இந்த உலகில் நிஜமாகும்.

வெறும் பெருமைக்காக எதையுமே செய்யாதே உன் மனநிறைவுக்காக உனக்கு பிடித்ததை பெருமையோடு செய்.

பூத்து குலுங்கினாலே பறித்து விடுவார்கள் என்று மலர் ஒரு நாளும் பூக்காமல் இருந்தது இல்லை மனிதர்கள் நாம் தான் இங்கு பலபேருக்காக பல நேரங்களில் பச்சோந்தி வேஷம் போட்டு கொண்டு இருக்கிறோம்

# ஹமாஸ் – இஸ்ரேல் போரானது ஈரான், அமெரிக்க பலப்பரீட்சையா ?

ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதில் ஈடுபடுகின்றது என்று இஸ்ரேல் வழங்கிய தகவல்கள் காரணமாக ஈரானுடன் செய்துகொண்ட அணு ஆயுத ஒப்பந்தத்திலிருந்து 2018 இல் விலகியதுடன் ஈரானுக்கு எதிராக அமெரிக்கா கடுமையான பொருளாதார தடையும் விதித்தது.

அதன்பின்பு வளைகுடா பிராந்தியத்தில் அடிக்கடி போர் பதட்டம் ஏற்படுவதுடன் எந்த நேரத்திலும் ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் போர் மூளலாம் என்ற சூழ்நிலை காணப்பட்டது.

கடந்த வருடம் ஈரானின் தளபதி ஹாசீம் சுலைமானி அவர்கள் ஈராக் விமானநிலையத்தில் வந்திறங்கியபோது அமெரிக்காவினால் கொல்லப்பட்டார். அதற்கு பழிவாங்கும் விதத்தில் ஈராக்கில் இருந்த அமெரிக்க தளம் மீது ஈரான் ஏவுகணை தாக்குதல் நடாத்தி அழித்தது.

இவ்வாறு அடிக்கடி பதட்டநிலை ஏற்படுகின்ற நிலையில், பாலஸ்தீனில் ஹமாஸ் இயக்கத்துக்கும் இஸ்ரேலுக்கும்பதினொருநாட்கள்போர் நடைபெற்றது. இந்த போரானது காஸா, இஸ்ரேல் ஆகிய பிரதேசங்களில் நடைபெற்றாலும், இதில் இரு தரப்பிலும் பாவிக்கப்பட்டது அமெரிக்காவினதும் ஈரானினதும் ஆயுத தளபாடங்களாகும்.

அதாவது இந்த போர் அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான ஓர் பலப்பரீட்சையாகவே அவதானிக்க முடிகின்றது.

அமெரிக்காவின் **F35** விமானமானது உலகிலேயே அதி நவீன போர் விமானமாகும். இது ராடர்களில் தென்படாது. அத்துடன் இதனை எந்தவொரு ஏவுகணை மூலமும் தாக்கி அழிக்க முடியாது. ரஷ்யாவின் **S400** வான்பாதுகாப்பு சாதனத்தினால் **F35** விமானத்தை வீழ்த்தமுடியும் என்று கூறப்பட்டாலும், அது ஈரானிடம் இல்லை.

**F35** விமானங்கள் இஸ்ரேலிடம் ஏராளமாக உள்ளது. இந்த விமானங்களின் மூலமாகவே காஸா மீது இஸ்ரேல் தாக்குதல் நடாத்தியது. அதுபோல் ஹமாஸ் இயக்கத்தின் ஏவுகணைகளை தடுத்து வீழ்த்திய "அயன் டோம்" என்னும் வான்பாதுகாப்பு சாதனம், சுரங்கங்களை அழிப்பதற்காக பாவித்த 'பங்கர் பஸ்டர்' குண்டுகள் உட்பட இஸ்ரேல் பாவித்த அனைத்து நவீன ஆயுதங்களும் அமெரிக்க தயாரிப்பாகும்.

அதேநேரம் ஹமாஸ் இயக்கத்தினர் பாவித்த சில ஏவுகணைகள் ஈரானிய தொழில் நுட்பத்தில் ஹமாஸ் இயக்கத்தினால் தயாரிக்கப் பட்டவைகள். இன்னும் சில ஏவுகணைகள் ஈரானிலிருந்து அதன் துணை இயக்கங்கள் மூலமாக காஸாவுக்குள் கொண்டுவரப்பட்டவைகளாகும்.

இஸ்ரேலின் கண்காணிப்பினை தாண்டி காஸாவுக்குள் ஆயுதங்களை கொண்டுவருவதில் உள்ள சிக்கல்கள் காரணமாக ஆயுதங்கள் தயாரிப்பதற்கான தொழிற்சாலைகளை ஹமாஸ் இயக்கத்துக்கு ஈரான் அமைத்துக் கொடுத்துள்ளது.

ஆனாலும் அமெரிக்காவின் முழு நவீன ஆயுதங்களையும் இஸ்ரேல் பாவித்தது போன்று ஈரானின் அனைத்து ஆயுதங்களும் ஹமாஸிடம் இல்லை. அத்துடன் வான்பாதுகாப்பு சாதனங்களோ, விமானப்படைகளோ ஹமாஸிடம் இல்லை.

எனவே இந்த போரானது ஹமாஸ், இஸ்ரேல் ஆகியோர்களுக்கிடையிலான போராக மட்டும் பார்க்க முடியாது. மாறாக அமெரிக்கா, ஈரான் ஆகிய பரம எதிரிகளுக்கிடையிலான பலப்பரீட்சையாகவும். இதில் அமெரிக்காவினால் வெற்றிபெற முடியவில்லை என்பதுதான் போரின் முடிவு தெரிவிக்கின்றது.

**முகம்மத் இக்பால்**
**சாய்ந்தமருது**



வாழ்க்கை தேடல்களுக்கான சிறந்த விடை உன் அனுபவங்களால் மட்டுமே உனக்கு கிடைக்க பெறும் ஆதலால் எதையும் நேருக்கு நேராக சந்தித்து விட்டு வெற்றி பெற்றால் ஜெயமாகட்டும் தோல்வியுற்றால் ஒரு சிறந்த அனுபவமாய் அமையட்டும்

நேரம் வரட்டும் செய்யலாம் என்று காத்திருப்பதும் காலம் வந்தால் எல்லாம் தன்னாலே கிடைக்கப்பெறும் என்ற மூட நம்பிக்கையோடு கனவு காண்பதும் ஒருபோதுமே உன் வாழ்க்கைக்கு உகந்தது அல்ல.

# ஓர் அகதியின் பயணம்

அது எனது முதல் விமான பயணம் நான் எங்கு பயணப்படப்போகிறேன் என்பது கூட அதுவரை அறியாமல் புறப்பட ஆயத்தமாய் கொழும்பு வெள்ளவத்தையில் எனக்காய் ஏற்பாடு செய்யப்பட்ட அறை ஒன்றில் குமார் அண்ணையின் வருகைக்காக காத்திருந்தோம்...

குமார் அண்ணை அவரை ஜேர்மன் நாட்டில் உள்ள எனது நெருங்கிய நண்பன் ஒருவனே அறிமுகப்படுத்தி விட்டிருந்தான். அவர் வெளிநாட்டிற்கு ஆட்களை சட்டவிரோதமாய் அனுப்பும் நபர் எனது நண்பன் உட்பட பலரை அவர்தான் அனுப்பி இருந்தார் ... அவர் இரவு 7 மணியளவில் வருவதாகவும் எம்மை புறப்பட தயாராக இருக்குமாறும் தொலைபேசியூடாக கூறியிருந்தார் ... அவர் கூறிய வார்த்தைகள் எவர் காது கேட்டதோ அறியேன் காலத்தை ஊழி இருள் மேவியது போல அந்த நிமிடம் அப்படியே சங்கமிக்க ... அந்த அறையின் சிவற்றில் இருந்த இலத்திரனியல் கடிகாரமும் தன் பங்கிற்கு இதயம் அற்ற இரும்பாய் நிமிடங்களை ஆமை வேகத்தில் நகர்த்திக்கொண்டிருந்தது போல் உணர்வு எனக்குள்ளாய் இருக்க நேரம் மெதுவாய் உருண்டோடியது... நாங்கள் தங்கி இருந்த அறையின் கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டு யார் என்றவாரே எழுந்து கதவருகில் சென்றேன் அப்பொழுதுதான் நேரத்தை கவனித்தேன் சரியாக 6:40ஆகியிருந்தது... (தம்பி நான் குமார் அண்ணையடா கதவ திற ) தடித்த குரல் பல நாட்களாய் தொலைபேசியில் மட்டுமே கேட்ட குரலை முதல் முறையா அன்றுதான் நேராக கேட்க மனதில் ஏதோ பயம் கலந்த ஆர்வத்தோடே கதவை திறந்தேன்

அந்த நேரம் வரை நான் அவரை நேரில் சந்தித்ததில்லை எனது நண்பன் அவரை பற்றி கூறியவகளை வைத்து அவரை ஆஜானபாகுவான ஓர் ஆடம்பர நபராகவே மன விம்பத்தில் பதிவேற்றியிருந்தேன். தம்பி நீதான எழில் என்று கேட்டவாறே உள்ளே வந்து அமர்ந்தவர்... தோற்றமும் ஆளும் எனது மனவிம்பத்தை தகர்தெறியும் படியாக எழிமையாகவே இருந்தது ...

என்னடா எல்லாம் சரிதான காலம 4 மணிக்கு கடைபாவ இருக்கு எல்லாம் சரி நீயும் இன்னும் இரண்டு பொடியள் கூட வருவானுகள் அங்க போய் இறங்கினதும் எங்கட ஆக்கள் அங்க நிப்பாங்கள் மிச்சம் அங்க சொல்லுவம் பயப்படாம இருக்கனும் அதுதான் முக்கியம் விளங்குதோ !!! என்றார் நானும் ஓம் அண்ணா ஆனா எந்த நாட்டுக்கு போறது என்றாவாரே அவர் முகத்தை பார்க்க அட இன்னும் சொல்லலையா உன்னட்ட மறந்தே போட்டன்டாபா முதல்ல ரஸ்யாதான் போறது அங்க இருந்து கார்ல அங்கால மாத்துவம் .. என அவர் பயணத்தை பற்றி விளங்கப்படுத்தியதும் நாங்கள் விமான நிலையத்திற்கு புறப்பட்டு சென்றோம் விமான நிலையத்திற்கான பயண நேரம் முழுவதுமாய் எங்கள் வாகன யன்னல் ஊடாக அந்த கொழும்பு வீதியின் எழில் மிகு அழகை இரசித்த வண்ணமே வந்தேன் ஏனோ தெரியவில்லை பலமுறை அந்த வீதியில் பயணப்பட்டிருந்தாலும் அன்று அந்த வீதி புதிதாய் பார்ப்பது போல தென்படவே எனக்குள்ளாய் நினைத்துக்கொண்டேன் மீண்டும் பார்க்க கூடுமோ என் எழில் மிகு தேசத்து அழகை .

என்னதான் காரணங்களுக்காய் புலம் பெயர்ந்தாலும் இது தானே நான் பிறந்து வளர்ந்த என் தாய் நாடு எனக்காய் உரித்துடைய மண் மாற்றன் தேசம் பொண்ணையும் பொருளையும் அள்ளிக்குவித்தாலும் அங்கு நான் மாற்றானே என அந்த ஒரு மணி நேர பயணத்துக்குள்ளாய் எண்ணிலடங்கா சிந்தனைகளுக்குள் மூழ்கியே இருந்தேன். அப்பொழுதுதான் அந்த அழகிய பிரமாண்டம் கண்களிற்கு புலப்பட்டது ஆம் அதுதான் இலங்கை சர்வதேச விமான நிலையம் அந்த காட்சிகளை வார்த்தைக்குள்ளாய் அடக்கிவிட முடியாத அளவு அழகும் உணர்வுகளும் கொட்டிக்கிடந்தது. ம க னை . க ண வ னை . அ ப் பா வை என வழியனுப்ப வந்த உறவுகளின் சோகம் நிறை கண்ணீரும் மறுபுறமாய் பல வருடங்கள் கணாத உறவுகளை கண்ட ஆனந்த கண்ணீருமாய் கண்ணீர் தேசமாய் காட்சியளித்துக்கொண்டிருந்தது அந்த விமான நிலையம்.. உறவுகளின் பிரிவும் இணைவும் ஒரே இடத்தில் ஒன்றாய் கண்ட கனமதில் ஏனோ என் நெஞ்சும் கலங்கியே போய் இருந்தது... அது ஒரு நள்ளிரவு நேரம் எங்கள் விமானப் புறப்பாடு அதிகாலை 2:40 ஆக இருந்த போதும் நாங்கள் 11:30 அளவில் எல்லாம் விமான நிலையத்தை அடைந்திருந்தோம். மீண்டும் ஒரு முறை எங்கள் மூவருக்கும் குமார் அண்ணை பயணம் பற்றிய விளக்கங்களை தெளிவுபடுத்தியிருந்த போதே நேரத்தை கவனித்தோம் சரியாக 1மணியாகி இருந்தது..

வார்த்தைகள் அற்ற மௌனத்தோட அனைவரும் விடைபெறத்தயாரனோம் அதுவரைஎன்னைஆற்றுப்படுத்திஆறுதலாய் தைரியமாய் நின்ற அம்மாவின் கண்களில் கண்ணீர்த்துளிகள் அவள் வாய் எந்த வார்த்தைகளையும் உதிர்த்திருக்கவில்லை அந்த கண்ணீரே அத்தனையும் பேசி முடித்திருக்க எனது உச்சிதனை முகர்ந்து மௌனத்தோடே ஈன்ற பொழுது துவங்கி இன்றுவரை தன்னகத்தே பொத்தி வளர்த்த தன் மகனை முதல் முறையாய் பிரியும் துயர் அவள் முகங்களில் வெளிப்படையாகவே தெரிய தன் தாய்மையை கல்லாக்கியே வழியனுப்பநானும்வார்த்தைகள்ஏதும்அற்று போய்ட்டுவாரன் என்று கண்களாலேயே விடைபெற்று கொண்டு... நேராக Airline check in counter க்கு சென்றோம் அங்கு எமது பொதிகளை [Luggage] நிறைபார்க்கப்பட்டு விமான Boarding pass களையும் பெற்றுக்கொண்ட பின்னர் எம்மை நாட்டை விட்டு வெளியேற அனுமதிப்பார்களா மாட்டார்களா என்னும் ஒருவித பதற்றத்தோடே **Immigration** ஐ நோக்கி சென்றோம் அதிகாரிகள் முடிவில்தான் எமது பயணம் தொடருமோ இதே இடத்தில் நிலைமாறுமாஎன்றஎமது மனப்பயத்திற்கான பதில் இருந்தது....



ஆனாலும் ஏற்கனவே அனைத்தும் ஒழுங்குபடுத்தப்பட்டு இருந்ததாலும் **Russ**யை நாட்டிற்கு நாங்கள் வணிக நோக்க விசா ஒன்றைப் பெற்றிருந்ததாலும் பெரிதாக எந்த ஒரு கேள்விகளும் இன்றி அடிப்படையான கேள்விகளோடு எங்கள் கடவுச்சீட்டில் **embarke** அதாவது நாட்டை விட்டு வெளியேறுவதற்கான முத்திரை குத்தப்பட்டு நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்கப்பட்டதும் மனம் சற்றே ஆசுவாசப்பட...விமானம் ஏறுவதற்கான காத்திருப்பு அறைக்குச் சென்று எமது விமானத்திற்காகக் காத்திருந்தபடியே அந்த கண்ணாடி யன்னல் ஊடாக விமானங்கள் ஏறுவதையும் இறங்குவதையும் பார்த்து வியப்பின் உச்சத்தில் ஆழ்ந்திருந்த போது ...

**Your attention please passenger off Russian Airlines on flight number RU476 to Russia please boarding from gate number A06. Thank you.**

என்ற விமான நிலைய அறிவிப்பு ஒலிபரப்பாகவே நாங்கள் விமானத்தில் ஏறுவதற்காக **Gate number A06** இற்கு சென்றோம் அங்கும் சிறிய சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு விமானத்தில் ஏறி எங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த இருக்கைகளில் அமர்ந்துகொண்டதும் விமானப் பணிப்பெண்களால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு விமானம் புறப்படத் தயாராகி வேகமெடுத்து மேல் நோக்கி எழும்பிய அந்த நொடி வாழ்நாளில் மறக்கமுடியாத நிமிடங்கள். நான் அதுவரை காலம் பார்த்திருந்த அத்தனை விமான விபத்து தொடர்பான திரைப்படங்களும் கண் முன்னே வந்து உண்மையில் உயிர் பயத்தைக் காட்டியே சென்றது அதை இன்று நினைத்தால் சிரிப்பாக இருந்தாலும் அப்பொழுது உண்மையில் பயந்து போயே இருந்தோம்.. சிறிது நேரத்தில் விமானம் அதன் பயண உயரத்தை அடைந்ததும் பயம் மேவி இருந்த மனது மாறி விமான யன்னல்கள் ஊடாக கீழ் தென்படும் முகில்களை இரசித்வாறே அந்த 8 மணிநேர பயணம் ஒரு முடிவுக்கு வந்தது விமானம் ஏறும் போது இருந்ததை விட இறங்கிய பொழுதுகள் அதி பயங்கரமாய் எம்மை பயம் காட்டியே இருந்தது எனலாம்... விமானம் தரையிறங்கியதும் அனைவரும் ஒவ்வொருவராக விமானத்தை விட்டு வெளியேறினார்கள் நாங்களும் அவர்களோடு வெளியேறி விமான நிலைய குடிவரவு **[immigration]** பகுதிக்குச் சென்றோம் அங்கு அனைவரதும் ஆவணங்களும் கடவுச்சீட்டும் அவர்களின் ரஷ்ய வருகைக்கான காரணங்களும் அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டு நாட்டுக்குள் அனுமதிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள் அதே போன்று எங்களது ஆவணங்களும் பரிசோதிக்கப்பட்டுப் பல கேள்விகளும் கேட்கப்பட்டது அந்த அதிகாரி **Are you SriLankan** என்றவாறே எனது கடவுச்சீட்டையும் என்னையும் நிமிர்ந்து பார்த்துவிட்டு சிறிது நேரம் காத்திருக்குமாறு கூறினார் நாங்களும் காத்திருக்கவே எம்மோடு விமானத்தில் வந்த அனை வரையும் பரிசோதித்து முடித்த பின் எங்களை மேலதிக விசாரணைக்காக விமான நிலையத்திலிருந்ததனியான அறைஒன்றிற்கு அழைத்துச்சென்று பல்வேறு கேள்விகளைக் கேட்டார்கள் சரியாக 2 மணிநேரத்திற்கும் மேலாக எம்மை காத்திருக்க வைத்தும் பல அதிகாரிகளின் விசாரணைகளிற்கும் பிறகு இறுதியாக எமது ஆவணங்கள் அனைத்தும் சரியாக இருந்ததாலும் எங்கள் பதில்கள் அவர்களுக்கு நம்பிக்கையை கொடுத்ததாலும் எம்மை அவர்கள் தங்கள் நாட்டிற்குள்ளாய் அனுமதித்திருந்தார்கள் ...

பிறகுதான் அறிந்து கொண்டேன் இத்தனை விசாரணைகளுக்கும் ஒரே காரணம் நான் **SriLankan** என்பதும் எம்மைப்போல பல இலங்கையர்கள் ரஷ்ய நாடு வழியாக ஐரோப்பாவிற்குள் செல்வதாலுமே என.. ஒரு வழியாக நாங்கள் ரஷ்ய நாட்டிற்குள் வந்ததும் குமார் அண்ணையின் ஆள் எமக்காய் காத்திருந்தார் குமார் அண்ணைக்கு அழைப்பை எடுத்து உறுதிப்படுத்திய பின்னர் அவர் எம்மை நாங்கள் தங்க வேண்டிய இடத்திற்கு அழைத்துச்சென்றார் .அவரும் ஒரு இலங்கையராக இருந்த போதும் அந்த நாட்டுப் பெண்ணை திருமணம் செய்து

ரஷ்ய குடியுரிமையும் பெற்றிருந்ததோடு அந்த ரஷ்ய பெண்ணின் வழிகாட்டலிலேயே ஆட்களை ஐரோப்பாவிற்குள்ளாய் மாற்றி வந்தார் என்பதையும் அவரோடான கார் பயணத்தில் அறிந்து கொண்டோம் ...பலமணிநேர பயணத்தின் பின்னர் எங்களை ரஷ்ய எல்லைப்பகுதிக்கு அருகில் காட்டினுள் அமைக்கப்பட்டிருந்த மரத்திலான வீட்டில் தங்கவைத்தார்கள் அது ஒரு மரம் வெட்டும் தொழிற்சாலை ஊழியர்கள் தங்கும் இடத்தில் நாங்களும் தங்கவைக்கப்பட்டு ஒரு கிழமைக்கான உணவுகளையும் வழங்கிவிட்டு இன்னும் ஐந்து நாளுக்க அங்கால மாத்துவம் அதுவரை இங்க இருக்க வேண்டும் என்றுவிட்டு சென்றார்கள்... ஐந்து நாட்கள் அப்படியாகவே சமைப்பதும் உண்பதுமாய் கடந்து விட குமார் அண்ணையிடம் இருந்து அன்று பிற்பகல் நேரம் அழைப்பு வந்ததும் பயணம் தொடர்பாகத்தான் எடுக்குறார் தயாராக இருக்குமாறு சொல்லப்போறார் என்னும் ஆர்வத்தில் நாங்கள் போனை எடுத்தமட்டில் தம்பியவ இன்டைக்கு இரவு வெளிக்கிடத்தான் எல்லாம் தயாரா இருந்தது திடீர் என்டு எல்லையில பாதுகாப்ப கூட்டிப்போட்டான்டாப்பா இன்டைக்கு சரிவராது போல காலம சமையல் சாமான் வரும் பொறுமையா இருங்கடாப்பா அவசரப்பட்டு ஒன்டும் செய்ய ஏலாது தானே என்டவர் பிறக கதைக்கிறன் என்றவாரே அழைப்பை துண்டிக்க எங்கள் மனங்களும் துண்டாடப்பட்டே போனது அன்றைய இரவு எல்லார்ட முகமும் அமாவாசை சந்திரனைப்போல பொழிவிழந்தே கிடக்க ... அடுத்த நாள் விடிய குமார் அண்ணா சொன்ன போலவே ஒரு கிழமைக்கு தேவையான பொருட்களும் வந்து சேர்ந்தது மீண்டும் வழமை போன்று நாட்கள் ஓடுவதும் இன்டைக்கு சரிவராடாப்பா என்டு நாட்கள் தள்ளிப்போவதுமாக இரண்டு மாதங்கள் கடந்த போது நாங்கள் அந்த வாழ்க்கைக்கு பழக்கப்பட்டே போயிருந்தோம். அப்பத்தான் குமார் அண்ணையின் அன்றைய அழைப்பு வர "என்னடாப்பா இன்டைக்கு சரிவராது பொறுங்கோ அதத்தான அண்ணை சொல்லப்போறார்" என்று நக்கலாக எங்களுக்குள்ளாய் பேசிக்கொண்டே நான் அழைப்பை எடுத்து பேச ஆரம்பிக்க

தம்பியவ இரவு வெளிக்கிடனும் சரியா 10மணிக்கு ஆள் வரும் தயாரா இருங்கடாப்பா என்றவர் மேலதிகமா எதையும் கதைக்கம அழைப்பை துண்டித்தா.... வழமைபோலதான் இதுவும் என்று நினைத்தாலும் நாங்கள் வெளிக்கிட்டு தயாராகி காத்திருந்தோம் நேரம் மெதுவாக உருண்டோடிக்கொண்டே இருந்தது 10 மணியாகியும் யாரும் வருவதாக தெரியவில்லை குமார் அண்ணையும் அழைப்பில் வராமலே இருக்க பொறுமை இழந்தவர்களாகியே போனாமே நேரம் 11 , 12 என ஆகியும் எதுவும் ஒன்றும் நடப்பதாய் தெரியவில்லை அப்படியே இருந்த இருந்த இடங்களில் நித்திரையாகிப்போனம்.... சரியாக நேரம் காலை 6 மணியிருக்கும் குமார் அண்ணைட ஆளும் அவரோடு இன்னும் ஒரு ரஷ்ய நபரும் வந்திருந்தார்கள் உடனடியாக எங்களை தயாராகச் சொல்லி அவருடன் வந்த ரஷ்ய நபரின் வாகனத்தில் ஏற்றிக்கொண்டு வாகனம் ரஷ்ய பின்லாந்து எல்லையை நோக்கி வேகமெடுத்தது ஒரு குறிப்பிட்ட தூரத்தின் பின்னர் குமார் அண்ணைட ஆள் இறங்கிக்கொண்டு "இவரோட போங்க அங்கால என்னால் வர முடியாது இவர் எல்லையில் கொண்டுபோய் ஒரு இடத்தில உங்கள இன்னும் ஒரு ஆள்ட்ட விடுவார் அங்கால காட்டுக்க நடந்து போக வேண்டி வரும் எல்லையை நடந்துதான் தாண்டனும் தாண்டினதும் பின்லாந்தில நிக்கிற ஆக்கள் வாகனத்தில பாதுகாப்பா கொண்டுபாவோங்கள் பயப்படாம போங்கடா

**தொடரும்...**


**பு.தர்சிகன்**




# மனதைப் படிக்கும் கணினிகள்!

மனித மூளையில் உதிக்கும் எண்ணங்களை புரிந்துகொள்வது, அதை திரையில் துல்லியமாக காட்டுவது. இந்த இரு செயல்களையும் செய்யும் கருவிகள் ஆய்வுக்கூடத்திலிருந்து வெளிவரத் தயாராகின்றன.

'பிரெய்ன் கம்ப்யூட்டர் இன்டர்பேஸ்' எனப்படும் மூளை-கணினி இடைமுக கருவிகளை பேஸ்புக் முதல் பல தனியார் அமைப்புகள் ஆராய்ந்து வடிவமைத்து வருகின்றன. அண்மையில், அமெரிக்காவிலுள்ள ஸ்டான்போர்டு பல்கலைக்கழகவிஞ்ஞானிகள், பக்கவாதத்தால் கழுத்துக்குக் கீழே உடல் செயலிழந்த ஒருவருக்கு புதுமையான சோதனையை நடத்தினர்.




அவரது மூளையில் இரு சிறிய சில்லுகளை விஞ்ஞானிகள் பதித்தனர். இந்த சில்லுகள் அவரது மூளையில், கைகளை இயக்கும் பகுதியில் உதிக்கும் சமிக்ஞைகளை, கணினிக்கு அனுப்பும் திறன் கொண்டவை. பக்கவாதம் வந்த நபர், தன் கையால் பேனா பிடித்து எழுதுவது போல கற்பனை செய்து, ஒவ்வொரு எழுத்தாக மனதிற்குள் நினைப்பார். அவை அப்படியே கணினி திரையில் தோன்றும். சில வார பயிற்சிக்குப் பிறகு, அவரால், நிமிடத்திற்கு 90 எழுத்துக்கள் என்ற வேகத்தில், தன் மனதில் நினைத்ததை, கணினி மூலம் திரையில் கொண்டு வர முடிந்தது.

மூளை-கணினி இடைமுகங் கருவிகள் சரளமாக மனித எண்ணங்களை புரிந்துகொள்ளும் திறனை விரைவில் பெற்றுவிடும். அப்போது, கை, கால் செயல் இழந்தோர்கூட, சக்கர நாற்காலியை இயக்குவது, எழுதுவது, ரோபோ கரங்களை இயக்கி வேலை செய்வது போன்றவற்றை எளிதாக செய்ய முடியும்.

# உலகில் எத்தனை பறவைகள் உள்ளன?




மனிதன் மக்கள் தொகை கணக்கெடுப்பை ஒரு பெரிய அறிவியல் நடவடிக்கையாக மாற்றி பெருமைப்பட்டுக்கொள்ளலாம். ஆனால், பறவைகள் இல்லாத உலகில் மனிதன் நீடிக்க முடியாது இல்லையா? அதனால் தான், உலக பறவைகள் தொகையை கணிக்க ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் முயன்றுள்ளனர். அவர்களது கணக்குப்படி உலகில் 50 பில்லியன் பறவைகள் உள்ளன.

மக்கள் அறிவியல் திட்டமாக இதை ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் முன்னெடுத்தனர். இதனால், உலகெங்கும் உள்ள அறிவியல் ஆர்வலர்கள் இந்த கணக்கெடுப்புக்கு உதவியுள்ளனர். அமெரிக்காவில் கார்னெல் பல்கலைக்கழகத்தில் கார்னெல் பறவையியல் ஆய்வகம் உள்ளது.

இது உலகிலுள்ள பறவையியல் ஆர்வலர்கள் தரும் தரவுகளை சேகரித்து இ-பேர்ட் (**eBird**) என்ற பறவைகள் தகவல் களஞ்சியத்தை உருவாக்கி பராமரித்து வருகிறது. ஆஸ்திரேலிய விஞ்ஞானிகள் இ-பேர்டின் தகவல்களையே பெரும்பாலும் தங்கள் கணிப்புக்கு பயன்படுத்தியுள்ளனர்.

இ-பேர்ட் களஞ்சியத்திலுள்ள 9,700 வகை பறவையினங்கள் பட்டியல் தற்போது உயிரோடுள்ள 92 சதவீத உலகப் பறவைகளை உள்ளடக்கிவிடும். மேலும், சில புள்ளியியல் முறைகள், செயற்கை நுண்ணறிவு நிரல்கள் ஆகியவற்ரைக் கொண்டு ஆஸ்திரேலியர்கள் தங்கள் கணிப்பை செய்துள்ளனர். பத்து ஆண்டுகளுக்கு முன்பு இப்படி ஒரு கணிப்பை நடத்தியிருக்க முடியாது என்று ஆஸ்திரேலிய பறவையியல் வல்லுநர்கள் தெரிவித்து உள்ளனர்.

# வளர்ந்து விரியும் இயற்கைக் காடு!

காடுகள் இயல்பாகவே பரந்து விரிந்து வளரக்கூடியவை. இயற்கைக் காடுகளின் வளர்ச்சி இன்று எந்த அளவுக்கு உள்ளது? இதை அளக்கும் விரிவான முதல் ஆய்வினை, 'உலக காட்டுயிர் நிதியம்' உள்ளிட்ட சில இயற்கை ஆர்வலர் அமைப்புகள் கூட்டாக மேற்கொண்டன.

கடந்த 30 ஆண்டுகளாக எடுக்கப்பட்ட செயற்கைக்கோள் புகைப்படங்களை வைத்து இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.இதன்படி, 2000ஆவது ஆண்டு முதல் தற்போது வரை, 5.9 கோடி ஹெக்டேர் பரப்பளவுக்கு இயல்பான வளர்ச்சியால் காடுகள் உருவாகியுள்ளன. இது பிரான்ஸ் நாட்டின் பரப்பளவுக்கு சமம்.இயற்கை பாதுகாப்பு அமைப்புகள், தன்னார்வலர்கள் என அழிக்கப்பட்ட காடுகளில் மரங்களை நடுவதற்கு செலவு ஆகின்றன.



இயற்கை காடுகளின் எல்லைகளைப் பாதுகாப்பது, மனித தலையீடு இல்லாமல் தவிர்ப்பது போன்றவற்றை செய்தாலே, 76 சதவீத செலவுகளை குறைத்து, இயற்கையாக காடுகளை வளரவிட முடியும் என ஆய்வாளர்கள் கணித்துள்ளனர்.

இது நல்ல செய்திதான் என்றாலும், காடுகள் அழிக்கப்படுவது நின்றுவிடவில்லை.ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, கடந்த 30 ஆண்டுகளில், உலக வனப் பகுதியில் 4.2 கோடி ஹெக்டேர் அழிந்துள்ளது. ஆனால், வன அழிப்பின் வேகம் கடந்த பத்தாண்டுகளில் குறைந்துள்ளது. இதுவும் ஆறுதலான சேதிதான்.

ஒரு பக்கம் மரங்களை காடுகளில் நடுவதை தொடரவேண்டும். யாரும் காடுகளை அழிக்காமல் காக்கவேண்டும். அதே நேரம், இயற்கையின் வன விரிவாக்கத்தை யாரும் கெடுத்துவிடாமலும் பார்த்துக்கொள்ளவேண்டும்.

# ஆற்றல் தரும் சைக்கிள் பாதை!

துபாயிலும் சுவிட்சர்லாந்திலும் தற்போது பரிசோதனையில் இருக்கிறது. இன்னும் சில ஆண்டுகளில் சைக்கிள் ஒரு முக்கியமான நகர போக்குவரத்து வாகனமாக ஆகிவிடும்.

அப்போது, அதற்கென தனி சாலைகளை நகராட்சிகள் உருவாக்கவேண்டி வரும். அப்படி வந்தால், ஜெர்மனியை சேர்ந்த கட்டிடக்கலைஞர் பீட்டர் குசியாவின், 'சோலார் வெலோருட்' மிகவும் பரவலாகிவிடும்.சைக்கிள் ஓட்டுவோரை வெயில், மழை, சூறாவளிக் காற்றிலிருந்து காக்க, வளைந்த கூரை. அந்தக் கூரையிலேயே சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் பலகைகள்.

இப்படிப்பட்ட ஒரு சிறப்புப் பாதை, ஒரு கி.மீ.,க்கு 2,000 எம்.டபிள்யு.எச்., அளவிற்கு மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என்கிறார் குசியா.இரண்டு அல்லது மூன்று வழித்தடம் கொண்ட சைக்கிள் பாதைகளை, எந்த நகரத்திலும், எந்த வளைவு சுழிவு, நெருக்கடிக்கும் ஏற்றவகையில் இருக்கும்படி சோலார் வெலோருட் அமைப்பு வடிவமைக்கப்பட்டிருப்பதாக குசியா உறுதியளிக்கிறார்.

மேலும், இரவு நேரங்களில் கூரையில் நல்ல வெளிச்சம் தரும் விளக்குகள் இருக்கும். எனவே, சைக்கிள் ஓட்டிகள் மட்டுமல்ல, பாதசாரிகளும் பாதுகாப்பாக இரவில் இந்த சிறப்புப் பாதையை பயன்படுத்தலாம். வழியெங்கும் இலவசமாக மொபைல் சார்ஜ் செய்யும் வசதிகளும் இதில் உண்டு. தவிர, இதில் பயன்படுத்தப்படாத மின்சாரத்தை, நகர மின்வாரியத்திற்கு நேரடியாக வழங்கவும் வோலோருட்டில் வசதி உண்டு. எனவே நிச்சயம் நவீன நகர்களில் இதற்கு மவுசு ஏற்படும்.



**எந்த ஒரு மோசமான காலகட்டத்திற்கும், ஒரு அறிவியல் மதிப்பு உண்டு. எந்த அறிவாளியும் இத்தகைய தருணங்களிலிருந்து கற்றுக்கொள்ளத் தவறவிடமாட்டார்.**

**ரால்ப் வால்டோ எமர்சன்,**
**அமெரிக்க கவிஞர்**



# விளையாட்டு செய்திகள்

## இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கான புதிய தலைவர் தெரிவு

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவராக ஷம்மி சில்வா போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தெரிவித்தது.

2021 - 2023 ஆண்டுக்கான அதிகாரிகளை தெரிவு செய்வதற்கான தேர்தல் அன்று (20) Zoom தொழில்நுட்பத்தினூடாக நடைபெற்றது.

அதில் முன்னாள் தலைவர் ஷம்மி சில்வா மீண்டும் கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் பதவிக்கு போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் குறிப்பிட்டது.

இலங்கை கிரிக்கெட் நிறுவன தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்திருந்த கே. மதிவாணன் தரப்பினர் வேட்பு மனுக்களை வாபஸ் பெற்றிருந்தனர்.




## பிரான்ஸ் கிண்ணம் : பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணி 13ஆவது முறையாக சம்பியன்!

பிரான்ஸ் கால்பந்தில் முதன்மையான நாக் அவுட் கிண்ண போட்டித் தொடரான, பிரான்ஸ் கிண்ண கால்பந்து தொடரில், பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

ஒவ்வொரு ஆண்டு நடைபெறும் இந்த போட்டித்தொடரின், நடப்பு ஆண்டுக்கான இறுதிப் போட்டி உள்ளூர் நேரப்படி அன்று (வியாழக்கிழமை) நடைபெற்றது.

ஸ்டேட் டி பிரான்ஸ் விளையாட்ரங்கில் நடைபெற்ற எதிர்பார்ப்பு மிக்க இப்போட்டியில், பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணியும் மொனாகோ அணியும் பலப்பரீட்சை நடத்தின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணி 2-0 என்ற கோல்கள் வெற்றிபெற்றது.

இதில் பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணி சார்பில், மயுரோ இகார்டி போட்டியின் 19ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் கிளியன் எம்பாப்வே 81ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் அடித்தனர்.

பிரான்ஸ் கிண்ண கால்பந்து தொடரில், அதிகப்பட்சமாக பரிஸ் செயிண்ட் ஜேர்மைன் அணி 13முறை சம்பியன் பட்டத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## 2021 ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் பிற்போடப்பட்டது

இலங்கையில் இடம்பெறவிருந்த 2021 ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் பிற்போடப்பட்டுள்ளது.

COVID தொற்று நிலைமை காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் அடுத்த மாதத்தில் ஆரம்பமாகவிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## ஜெனீவா பகிரங்க டென்னிஸ்: டேனிஸ் ஷபலோவ் அரையிறுதிக்கு முன்னேற்றம்!

ஜெனீவா பகிரங்க டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியில், கனடாவின் டேனிஸ் ஷபலோவ் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.



எதிர்பார்ப்பு மிக்க காலிறுதிப் போட்டியில், கனடாவின் டேனிஸ் ஷபலோவ், செர்பியாவின் லால்லோ டீரை எதிர்கொண்டார்.

இப்போட்டியில் சிறப்பாக விளையாடிய கனடாவின் டேனிஸ் ஷபலோவ், 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்று அரையிறுதிக்குள் நுழைந்தார்.

அன்று (வெள்ளிக்கிழமை) நடைபெறும் அரையிறுதிப் போட்டியில், கனடாவின் டேனிஸ் ஷபலோவ், அர்ஜெண்டினாவின் பப்லோ கியூவாசுடன் மோதவுள்ளார்.

## பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து ஸ்டென் வாவ்ரிங்கா விலகல்!

ஆண்டின் இரண்டாவது கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரான பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து சுவிஸ்லாந்தின் முன்னணி வீரரான ஸ்டென் வாவ்ரிங்கா விலகியுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் இடது காலில் ஏற்பட்ட காயத்துக்கு சத்திர சிகிச்சை செய்துக்கொண்ட வாவ்ரிங்கா, இன்னமும் காயத்திலிருந்து முழுமையாக மீளாததால் இந்த முடிவை எடுத்துள்ளார்.

இதேவேளை 36 வயதான வாவ்ரிங்கா விம்பிள்டன் டென்னிஸ் தொடருக்கு முன்பாக நடக்கும் புற்தரை டென்னிஸ் தொடர்களில் களம் திரும்ப திட்டமிட்டுள்ளார்.

செம்மண் தரையில் நடைபெறும் பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் தொடரில், ஸ்டென் வாவ்ரிங்கா கடந்த 2015ஆம் ஆண்டு சம்பியன் பட்டம் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நடப்பு ஆண்டுக்கான பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் தொடர், எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகின்றது.






## சர்வதேச அழுத்தங்களை தொடர்ந்து இஸ்ரேல்— பாலத்தீனத்திற்கு இடையேயான மோதல் நிறுத்தம்!

சர்வதேச அழுத்தங்களை தொடர்ந்து 11 நாட்களுக்கு பிறகு இஸ்ரேல் மற்றும் பாலத்தீனத்திற்கு இடையே நடைபெற்று வந்த மோதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த சண்டை நிறுத்தம் அன்று (வெள்ளிக்கிழமை) முதல் அமுலுக்கு வந்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இயக்கத்தினருக்கு இடையேயான சண்டை நிறுத்த பேச்சுவார்த்தையில் எகிப்து, கட்டார் மற்றும் ஐ.நா. மத்தியஸ்தம் செய்து வைத்தன. சண்டை நிறுத்த ஒப்பந்தத்திற்கு பிறகு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை தொலைப்பேசியில் அழைத்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பாராட்டியுள்ளார். காசாவில் 100க்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 232 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என ஹமாஸின் கட்டுப்பாட்டில் இருக்கும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

காசாவில் கொல்லப்பட்டவர்களில் 150 பேர் ஹமாஸ் குழுவை சேர்ந்தவர்கள் என இஸ்ரேல் தெரிவிக்கிறது. ஆனால் ஹமாஸ் குழுவினர் தங்களை குழுவை சேர்ந்தவர்கள் எத்தனை பேர் உயிரிழந்துள்ளனர் என்ற தகவலை வெளியிடவில்லை. இஸ்ரேலை பொறுத்தவரை குழந்தைகள் உட்பட 12பேர் கொல்லப்பட்டுள்ளனர் என அதன் மருத்துவ சேவைகள் தெரிவித்துள்ளன.



## ஹங்கேரியில் கொவிட்-19 தொற்றினால் எட்டு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்பு!

ஹங்கேரியில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) பெருந் தொற்றினால், மொத்தமாக எட்டு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின் படி, ஹங்கேரியில் கொவிட்-19 தொற்றினால் எட்டு இலட்சத்து 368பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். உலகளவில் கொவிட்-19 தொற்றினால் அதிக பாதிப்பினை எதிர்கொண்ட 32ஆவது நாடாக விளங்கும் ஹங்கேரியில் இதுவரை 29ஆயிரத்து 380பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் வைரஸ் தொற்றினால், 780பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு 51பேர் உயிரிழந்துள்ளனர்.





தற்போதுவரை வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட ஒரு இலட்சத்து 15ஆயிரத்து 29பேர் அங்குள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 212பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. அத்துடன் இதுவரை வைரஸ் தொற்றிலிருந்து ஆறு இலட்சத்து 55ஆயிரத்து 959பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

## மாலைத்தீவில் கொவிட்-19 தொற்றினால் மொத்தமாக 50ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிப்பு!

மாலைத்தீவில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) பெருந் தொற்றினால், மொத்தமாக 50ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின் படி, மாலைத்தீவில் கொவிட்-19 தொற்றினால் 50ஆயிரத்து 802பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.



உலகளவில் கொவிட்-19 தொற்றினால் அதிக பாதிப்பினை எதிர்கொண்ட 108ஆவது நாடாக விளங்கும் மாலைத்தீவில் இதுவரை கொவிட்-19 தொற்றினால் 114பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் வைரஸ் தொற்றினால் இரண்டாயிரத்து 194பேர் பாதிக்கப்பட்டதோடு 2பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதுவரை வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட 20ஆயிரத்து 285பேர் அங்குள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 90பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

அத்துடன் இதுவரை வைரஸ் தொற்றிலிருந்து மொத்தமாக 30ஆயிரத்து 403பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

## தமிழகத்தில் பொது முடக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை தமிழர்கள்

தமிழகத்தின் நாமக்கல் மாவட்டத்தில் பரமத்தி எனும் பகுதியில் உள்ள இலங்கை தமிழர் முகாமில் வசிக்கும் மக்கள் அடிப்படை வசதிகள் இன்றி பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. குறித்த முகாமில் 250 குடியிருப்புகளில் 800-க்கும் அதிகமான இலங்கை தமிழர்கள் வசித்து வருகின்றனர்.

இங்கு குடிநீர் மற்றும் கழிவறை வசதிகள் மிகவும் குறைவாக இருப்பதால் மக்கள் மிகுந்த அசௌகரியத்தை எதிர்நோக்கி வருவதாக 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது. முகாமில் வசித்து வருகின்ற பெரும்பாலான மக்கள் அன்றாட கூலி வேலைக்கு செல்பவர்கள். இதனால், தமிழகத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள பொது முடக்கம் இவர்களை வெகுவாக பாதித்துள்ளது.


800-க்கும் அதிகமானவர்கள் வசித்து வரும் முகாமில் 7 பொது கழிவறைகள் மத்திரமே உள்ளதாகவும் குறைந்த எண்ணிக்கையிலான பொது நீர் குழாய்கள் உள்ளதால், மக்கள் வருடம் முழுவதும் சிரமத்தை எதிர்கொள்வதாகவும் த ஹிந்து வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொது குடிநீர் குழாய், கூடுதல் கழிவறை மற்றும் கழிவு நீர் கால்வாய் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை தமிழக அரசு செய்து தர வேண்டும் என பரமத்தி முகாமில் வசிக்கும் இலங்கை மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## செவ்வாய்க் கிரகத்தில் எடுத்த நிழற்படங்களை வெளியிட்டது சீனா

செவ்வாய்க் கிரகத்தில் தரையிறங்கிய **Zhurong rover** விண்கலத்தினால் எடுக்கப்பட்ட நிழற்படங்களை சீனா வெளியிட்டுள்ளது. சீனாவின் தேசிய விண்வெளி மையம், தனது வலைத்தளத்தில் இந்த நிழற்படங்களை பகிர்ந்துள்ளது.

இந்த நிழற்படங்கள் கிரகத்தின் நில அமைப்பை காட்டுவதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன. சீனாவின் Zhurong விண்கலம், கடந்த ஞாயிற்றுக்கிழமை வெற்றிகரமாக செவ்வாயில் தரையிறங்கியது.

செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பில் வெற்றிகரமாக விண்கலத்தை தரையிறக்கி ஆய்வு செய்ய நாடுகளில் அமெரிக்காவை தொடர்ந்து சீனா இரண்டாவது நாடாக பதிவாகியுள்ளது. தரையிறங்கியது மட்டுமல்லாமல் அதை குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் இயக்கும் சிறப்பையும் சீனா பெற்றுள்ளது. 06 சக்கரங்கள் கொண்ட குறித்த ரோவர் அங்கு 90 நாட்கள் வரை பணியாற்றும் என சீன விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.



## மலாவியில் காலாவதியான அஸ்ட்ராஸெனகா கொரோனா தடுப்பூசிகள் பகிரங்கமாக தீயிட்டு எரிப்பு!

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான மலாவியில், காலாவதியான அஸ்ட்ராஸெனகா கொரோனா தடுப்பூசிகள் பகிரங்கமாக தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 26ஆம் திகதி ஆபிரிக்க ஒன்றியத்திடமிருந்து ஒரு லட்சத்து இரண்டாயிரம் அஸ்ட்ராஸெனகா தடுப்பூசிகளை மலாவி பெற்றுக்கொண்டது.

இதில் 80 சதவீதம் தடுப்பூசிகள் பயனாளிகளுக்கு போடப்பட்ட நிலையில், தடுப்பூசிகளில் காலாவதி திகதி ஏப்ரல் 13 என குறிப்பிடப்பட்டிருந்த கிட்டதட்ட இருபதாயிரம் தடுப்பூசிகள் தற்போது தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

காலாவதியான தடுப்பூசிகளை அழிக்க வேண்டாம் என்று முதலில் உலக சுகாதார நிறுவனம் கேட்டுக்கொண்டிருந்தது. இப்போது அது தனது முந்தைய அறிவுரையை மாற்றிக்கொண்டு விட்டது என தகவல்கள் கூறுகின்றன.


இந்தநிலையில், இப்படி காலாவதியான கொரோனா தடுப்பூசிகளை பகிரங்கமாக தீயிட்டு எரித்த முதல் ஆபிரிக்க நாடு என்ற பெயரை மலாவி பெறுகிறது.

தடுப்பூசிகள் எரிக்கப்பட்டது குறித்து சுகாதார அமைச்சர் டாக்டர் சார்லஸ் மவன்சம்போ கூறுகையில், 'எங்களிடம் காலாவதியான தடுப்பூசிகள் இருப்பதாக தகவல்கள் பரவியபோது, தடுப்பூசி போட்டுக்கொள்வதற்கு மக்கள் யாரும் வரவில்லை என்பதை கவனித்தோம்.

நாங்கள் அவற்றை எரித்து அழிக்காவிட்டால், காலாவதியான தடுப்பூசிகளை பயன்படுத்துகிறோம் என்று மக்கள் நினைப்பார்கள். அவர்கள் தடுப்பூசி போடவரவில்லை என்றால் கொரோனா வைரஸ் தாக்கும்' என கூறினார்.

1 கோடியே 80 லட்சம் மக்கள் தொகையை கொண்ட மலாவியில், இதுவரை கொவிட்-19 தொற்றினால் 34,251பேர் பாதிக்கப்பட்டுள்ளதோடு 1,153பேர் உயிரிழந்துள்ளனர்.

# COVID-19 கொரோனா வைரஸின் திடீர் எழுச்சியின் போது கர்ப்பிணிப் பெண்களுக்கான அறிவுறைகள்



மருத்துவ சேவைகளுக்காக நீங்கள் பதிவு செய்யவில்லை எனில், உங்கள் குடும்ப சுகாதார சேவை அதிகாரி அல்லது உங்கள் உடல்நிலை குறித்த மருத்துவ அதிகாரிக்கு தொலைபேசி மூலம் தெரிவிக்கவும்

நீங்கள் 8 மாதங்கள் (32 வாரங்கள்) அதற்கு மேற்பட்டதான கர்ப்பிணியாக இருந்தால் உங்கள் குடும்ப சுகாதார சேவை அதிகாரியை தொடர்பு கொண்டு மருத்துவரை சந்திக்கவும்

நீங்கள் 8 மாதங்களுக்கு (32 வாரங்களுக்கு) குறைவான கர்ப்பிணியாக இருந்தால்உங்களுக்கு கீழேக்குறிப்பிட்டுள்ள அறிகுறிகள் இருப்பின் உங்கள் குடும்ப சுகாதார சேவை அதிகாரியை தொலைப்பேசி மூலம் தொடர்புக் கொண்டு உங்கள் தற்போதைய சுகாதார நிலைமை குறித்து அவர்களுக்கு அறிவித்து மருத்துவரை சந்திக்கவும்.

- நீரிழிவு நோய்
- உயர் இரத்த அழுத்தம்
- இதய நோய்கள்
- சுவாச பிரச்சினைகள்
- வேறு ஏதேனும் அறிகுறிகள் அல்லது சிரமங்கள்

முடிந்தவரை வீட்டிலேயே இருங்கள். தேவையற்ற பயணத்தைத் தவிர்க்கவும். உ.ம். நிகழ்வுகள், பயணங்கள், பொருள் கொள்வனவு போன்றவை.

மேலதிக தகவல்களுக்கு, 24 மணி நேர அவசர தொலைபேசி இலக்கம் 1999 யை தொடர்பு கொள்ளவும் அல்லது உங்கள் குடும்ப சுகாதார சேவை அதிகாரியை தொடர்பு கொள்ளவும்.

# COVID-19 ஐ தடுக்க வேலை ஸ்தலங்களில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்



நாம் வேலை ஸ்தலங்களில் அதிக நேரம் செலவிடு கிறோம். எனவே, கொவிட் -19 க்கு எதிராக செயல்படும் இடங்களை எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்து நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும்

உங்கள் வேலை ஸ்தலங்களை பாதுகாப்பாக வைத்திருக்க இவ் வழிமுறைகளை பின்பற்றவும்.

காய்ச்சல், இருமல் அல்லது தடிமன் போன்ற லேசான அறிகுறிகளை யாரேனும் கொண்டிருந்தால், முழுமையாக குணமாகும் வரை வேலைக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்துங்கள். முடிந்தால், வீட்டிலிருந்து வேலை செய்ய ஊக்குவியுங்கள்.

கதவு கைப்பிடிகள், தொலைபேசிகள், மேசை மேற்பரப்பு, பிணைப்பிகள் போன்ற பல நபர்கள் பயன்படுத்தும் உபகரணங்களை சுத்தம் செய்யுங்கள்

சவற்காரத்தை பயன்படுத்தி உங்கள் கைகளை நன்கு கழுவுங்கள். உங்கள் முகம், வாய், மூக்கு மற்றும் கண்களை தொடுவதை தவிர்த்துக்கொள்ளுங்கள். கொவிட் -19 வைரஸ் பொதுவாக தொடர்பு மூலமே பரவுகின்றது.

சுகாதார மேம்பாட்டு பணியகம்

இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 23.05.2021 அன்று வெளியிடப்பட்டது.